உ

ஓம் சக்தி துணை

# துர்க்கா மஞ்சரி

"முக்கண்ணியை தொழுவார்க்கு ஒருதீங்கில்லை"

அபிராமி பட்டர்

தாரண வருடம் ஐப்பசி 6ம் திகதி வள்ளுவர் ஆண்டு 2035 (22-10-2004)


வெளியீட்டாளர்

அருள்மிகு துர்க்காதேவி இந்து தேவஸ்தானம்

மலர்: 5 இதழ்: 1



**7468 EDMONDS STREET, BURNABY, B.C. V3N 1B2. TEL: (604) 521-3472**


முன்னின்று செய்யுள் முறையாப் புனைவதற்கு
என்னின் நருள் செய் எலிவா கனப்பிள்ளைய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வராமற்கா.

# ஆலயமும் நாமும்

இந்த ஆண்டில் மலரும் முதலாவது மலர், நீண்ட நாள் இடை வெளிக்குப் பின் அடியார்களாகிய உங்களுடன் துர்க்கா மஞ்சரி இந்த இதழ் மூலம் எங்கள் எண்ணங்களை பகிர்ந்து கொள்வதில் பெருமையடைகிறோம். துர்க்கா மஞ்சரி இதழ் சமய ஆக்கங்களை தாங்கிவருவது மட்டுமல்லாது, ஆலயத்தின் செயற்பாடுகள் பற்றியும், எதிர்கால நடவடிக்கைகள் பற்றியும் தங்களுடன் பகிர்ந்து கொள்வதே எமது நோக்கம்.

இவ்விதழில் இந்த ஆண்டில் எமது ஆலயத்திற்கு வருகை தந்திருந்த சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் சீடர் சற்குரு போதினாத வேலன் சுவாமிகள் ஆற்றிய உரையின் தமிழாக்கமும், அதைத்தொடர்ந்து தமிழ் மண்ணே வணக்கம் என்ற கட்டுரையும் சிந்தனைக்கு சில வரிகளும், சிறுவர் விருந்தும், யோகமும் தியானமும் அதைத்தொடர்ந்து சில இந்தாண்டில் வரும் பெரும் விரதங்களாகிய நவராத்திரி, கந்தசட்டி பற்றிய கடடுரைகளும் இடம் பெறுகின்றன.

மொழியாலும் சமயத்தினாலும் துர்க்கை அம்மன் ஆலயத்தில் ஒன்று கூடுகிறோம். தெய்வத்திடம் அருளைப்பெற நாம் ஆலயத்திற்கு வருகிறோம். ஆலயமானது தனிய வழிபாட்டுடன் மட்டும் நின்று விடுவதில்லை அதற்கப்பால் கல்வி, கலை, கலாச்சார, பாரம்பரியங்களைப் பேணி வளர்க்கும் இடமாகவும் அமைகிறது. ஆம் இவை எல்லாவற்றையும் கருத்திற் கொண்டு எமது துர்க்கை அம்மன் ஆலயத்திலும் தமிழ், சமய, யோக, பாட வகுப்புக்கள் மட்டுமல்லாது கணணி வகுப்புக்களும் சனி, ஞாயிறு கிழமைகளில் நடைபெறுகிறது. வருங்கால சந்ததியினருக்கு எமது சமய அறிவை ஊட்டுவது மட்டும் எமது நோக்கமல்ல, ஒழுக்க சீலர்களாகவும் இந்த அன்னிய மண்ணில் எம்மை அடையாளம் காட்டக் கூடியவர்களா அவர்களை ஆக்குவது பெரியோராகிய எமது கடைமையாகும்

இந்த ஆண்டில் நடை பெற்ற பெரும் விழாக்களைப் பார்க்கும் போது எமக்கு இந்த கட்டிடம் எமது பெரும் வைபவங்களுக்கு போதுமா என்ற கேள்வி எழுகிறது. ஆகவே இனிவரும் காலங்களை கருத்திற் கொண்டு நிர்வாகம் இதற்கென்று ஒரு சபையை ஏற்படுத்தி புதிய காணி ஒன்றை வாங்கவும் அதில் புதிய ஆலயம் ஒன்றை அமைக்கக் கூடிய விதத்திலும் செயற்பட ஆரம்பித்திருக்கிறது. ஆகவே அடியவராகிய நீங்களும் ஆலயத்திற்கு ஏற்ற வகையில் காணி எங்காவது இருக்குமெயானால், ஆலய நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இது உங்கள் ஆலயம் இந்த ஆலயத்தின் வளர்ச்சியிலும், முன்னேற்றத்திலும் உங்கள் பங்களிப்பு மிகவும் அவசியம். எமக்கு இப்போதுள்ள காணி கட்டிடம் போதாது இன்னுமொரு காணி வாங்கி கட்டிடம் கட்டுவதானாலும் சரி இந்த கட்டிடத்திலே இருப்பதானாலும் சரி அம்பிகை அடியவர்களாகிய உங்கள் கைகளிலேதான் முற்றும் தங்கியுள்ளது. எமது ஆலயத்தின் 150 அடியவர்கள் அங்கத்தவர்களாக தற்பொழுது இருக்கிறார்கள் இது போதாது, அங்கத்கவர்களாக தம்மை இன்னும் ஆலயத்தோடு இணைத்துகத் கொள்ளாதவர்கள் தயவு செய்து அங்கத்தவர்களாக சேர்ந்து மாதாந்த கட்டணத்தைக் கட்டி ஆலய வளர்ச்சியில் பங்கு கொண்டு எல்லாம் வல்ல அம்பிகையின் அருளைப் பெற்றுய்யுமாறு வேண்டிக் கொள்ளுகிறோம்.

# ஆலய பூசை நேரங்கள்

தினம் தோறும் மதியநேரப்பூசை பகல் 12.00 மணிக்கு நடைபெறும்.

தினம் தோறும் இரவு நேரப்பூசை இரவு 7.30 மணிக்கு நடைபெறும்.

இராகு காலப்பூசை பிரதி செவ்வாய் தோறும் பகல் 2.00 மணிக்குநடைபெறும்.

அருள்மிகு துர்க்காதேவி இந்து தேவஸ்தானம்

பூசைக்கான கட்டண விபரம்

| | | |
|---|---|---|
| 1. | சாதாரண அருட்சனை/**Ordinary Archanai** | **$** 5.00 |
| 2. | மோட்ச்ச அருட்சனை /**Special Archanai** | **$** 11.00 |
| 3. | சகஸ்ரநாம அருட்சனை /**1008 NAMES & Deity Archanai** | **$** 21.00 |
| 4. | வாகன பூசை, / **Vehicle Poojah** | **$** 21.00 |
| 5. | படம் வைக்கும் பூசை/ **Picture Praying Poojah** | **$** 21.00 |
| 6. | சோறூட்டுதல்/**Initiating Baby shower** | **$** 51.00 |
| 7. | சாதாரணபூசை/ **Ordinary Poojah** | **$** 51.00 |
| 8. | அபிசேகம் பூசை உட்பட/ **ABBISEKAM** | **$**101.00 |
| 9. | ஸ்நாபன அபிசேகம்/ **SNABANA ABBISEKAM** | **$** 251.00 |
| 10. | சங்காபிசேகம்/ **SANGABISEKAM** | **$** 401.00 |

மேல் குறிப்பிட்டவற்றிக்கு பிரசாதம் தனி

அங்கத்தவராக சேரவிரும்பும் அடியார்களும் ஆத்மசாந்தி, கல்யாணம், வீடு குடிபுகுதல், அன்னதானம், போன்ற விபரங்களுக்கும் நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# அருளுரை

கைலாச பரம்பரையின் நாதசித்தராய், சீவன் முத்தராய், யாழ்ப்பாணத்தில் இருந்து உலகெங்கும் ஞான ஒளி பரப்பிய மாமுனிவர் சிவயோகசுவாமிகளின் வழிவந்தவரும், அமெரிக்காவின் ஹாவாய் தீவில் அமைந்துள்ள குவை சைவ ஆதீனத்தின் முதல்வருமான, சற்குரு போதிநாத வேலன் சுவாமிகள் பிரிட்டிஸ் கொலம்பியா போர்னபி நகரில் அருள்மிகு துர்க்காதேவி இந்து தேவஸ்தானத்திற்கு ஆனி 20,2004 தினத்தன்று வருகை தந்து ஆற்றிய அருளுரையின் தமிழாக்கம்.

மொழிபெயர்ப்பு: திரு. மாணிக்கம் செந்திவேல்

<u>மேற்கத்திய கலாச்சாரத்தில் வாழும் இந்துபிள்ளைகளை வளர்ப்பது எப்படி?</u>

எமது கவாய் ஆச்சிரமத்திற்கு வருகை தரும் பல இந்து குடும்பங்கள் குறிப்பாக இளம் சிறார்கள் உள்ள பெற்றோர்கள் என்னிடம் தங்களுடையு பிள்ளைகளுக்கு ஏதாவது புத்திமதி கூற முடியுமா என்று கேட்பார்கள். நான் ஒன்றோ இரண்டோ
அபிப்பிராயங்கள் முலம் அவர்களுக்கு பதில் கூறுவேன். குறிப்பாக பெற்றோர்கள் சிறார்களுக்கு அவர்கள் ஈடுபாடு கொள்ளக் கூடியமுறையில் நமது இந்து தத்துவங்களைக் கூறுதல் வேண்டும் என்ற கருத்தை முன்வைபேன். தேயையான எல்லாவற்றையும் ஒரேமுறையில் சொல்லிவிடமுடியாது. அதற்கு நேரம் இருப்புதும் கடினம். எனவே நான் இந்த புத்திமதிகளை நமது அன்பின் குருதேவர் சுப்பிரமுனிய சுவாமிகள் அவர்களின் அறிவு உரைகளில் இருந்து எடுத்து ஒருபுத்தக வடிவமாக்கி உள்ளேன். அதில் இன்று நான்கு பகுதிகளைக் கூறுவது உங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்குமென நம்புகிறேன்.

பகுதி 1: வீட்டில் இந்து சமயம்

இந்துசமய தத்துவங்களை பிள்ளைகளுக்கு கற்பிப்பதில் பெற்றோர்கள் முதல் ஆசானாக இருக்கவேண்டும்.

இன்று பல கோயில்களில் இந்து சமயம் கற்பிப்பது பிரபலமாகவும் பயன் தரக்கூடிய ஒரு கல்வி முறையாகவும் ஆக்கியுள்ளார்கள். இது வரவேற்கத் தக்கது என்றாலும் பெற்றோர்கள் வீடுகளில் கற்பிக்கும் பொறுப்பில் இருந்து தவறுதல் நல்லதன்று. பெற்றோர்கள் தம்சிறார்களின் முதல் குருவாக இருக்கவேண்டும். உதாரணம் விளக்கம் புத்திமதி வழிகாட்டுதல் போன்ற பல முறைகளில் பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு இந்து சமய தத்துவங்களை கற்பித்தல் வேண்டும். சிறார்களின் ஆழ்ந்த மனதில் பதிவது பெற்றோரின் செயலும் அவர்கள் கூறுவதுமே. எனவே பெற்றோர்கள் தகுந்த முறையில் கற்பிப்பதன் மூலம் பிள்ளைகள் வளரும்போது இந்து சமய கல்வியை தங்களது வாழ்க்கையின் முக்கிய ஒரு பகுதியாக்கிக் கொள்கிறார்கள். இதில் இருந்து தவறுவதற்கு சந்தர்ப்பம் குறைவாகின்றது.

தற்போதைய நிலையில் இந்துக் குழந்தைகள் வாலிபர்களாகி குடும்ப வாழ்க்கையில் நுழையும் போது அவ்கள் இந்து கலாச்சாரத்தை பின்பற்றுவார்கள் என்பதில் நம்பிக்கை கொள்ள முடியவில்லை.

தற்போதுள்ள இந்துக் குழந்தைகளை பாருங்கள். அவர்களுக்கு இந்து சமயத்திலும் கலாச்சாரத்திலும் எதுவித நாட்டமும் இல்லை. நூறு வருடங்களுக்கு முன்பு தொலைக்காட்சி, சினிமா கணனி போன்ற விஞ்ஞான ரீதியான கருவிகள் வருவதற்கு

முன்பு, இந்தியா, இலங்கை மற்றும் இந்துக்கள் வாழும் நாடுகளிலுள்ள கிராமங்களிலும், நகரங்களிலும் கோயில்களே மிகவும் விரும்பக் கூடிய இடங்களாக இருந்தன. அதோடு நாடகங்களும், நடனங்களும், கலைநிகழ்சிகளும் முக்கிய பொழுது போக்கு சாதனங்களாக இருந்தன. கோயில்கள் சமூகங்களின் மையமாக இருந்தன. நமது தற்போதய விஞ்ஞான உலகத்தில், இளைஞர்கள் கோயில்களுக்கு செல்வதைத் தவிர்த்து, நண்பர்களுடன் சினிமா தொலைக்காட்சி, கணனி போன்ற சாதனங்களில்

நேரங்களைக்களிப்பதையே பெரிதும் விரும்புகிறார்கள். ஏன் இந்த நிலை? காரணம் இந்து கலாச்சாரம் இளைஞர்கள் வாழ்க்கையில் முக்கியமானதாகக் கருதப்படாததே ஆகும். இந்து சமயம் அவர்களுடைய வாழ்க்கையை ஒளிமயமாக்குகிறது என்பதை அவர்கள் உணருவதில்லை. இதனால்தான் பெற்றோர்களுக்கு இளைஞர்களை வெற்றிப்பாதைக்கு கொண்டு செல்வது மிகப்பெரிய போராட்டமாக கருதப்படுகிறது.

**ஒவ்வொரு வீடுகளிலும் வழிபாட்டு அறை உருவாக்குதல்**

ஒவ்வொரு வீடுகளிலும் வழிபாட்டு அறை உருவாக்குவதால் குடும்பத்தில் இந்து சமய தத்துவம் வலுவடைகின்றது. தனிப்பட்டஅறை ஒன்றைவழிபாட்டு இடமாக பாவிப்பது சிறந்ததாகும். அப்படி முடியாத தருணத்தில்அறையின் மூலைப்பகுதி ஒன்றை வழிபாட்டு இடமாகதேர்ந்து எடுக்கலாம். இறைவனுக்கு பூக்கள் பழங்கள் உணவுகள் போன்றவற்றை சமர்ப்பித்தல் நன்று. வீட்டில் இருந்து வெளியே போகும் போதும் வெளியில் இருந்து வீட்டிற்கு வரும்போதும் வழிபாட்டு அறைக்கு சென்று இறைவனுக்கு வணக்கம் செய்தல் வேண்டும். முழுமனதுடன் ஆண்டவனை தியானிக்கும் பொழுது நம்மிலும் நம்மை சார்ந்தவர்களிலும் இறைஆற்றல் ஏற்படுவதை உணரலாம். பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு வழிபாட்டு அறையில சென்று வணங்குவதைப் பழக்கிக்கொள்ள தெண்டிக்க வேண்டும். குறைந்தபட்சம் முக்கிய செயல்களில் ஈடுபடுவதற்கு முன்பு குறிப்பாக பரீட்சைகளுக்கு செல்வதற்கு முன்பு இறைவணக்கம் பழக்கப்படல் வேண்டும்.

**தினம் காலையில் குடும்ப அங்கத்தினர் ஒவ்வொருவரும் கூடி ஒன்றாக வழிபாட்டு அறையில் இறைவனை வணங்குதல் வேண்டும்.**

ஆங்கிலத்தில் பிரபல்யமான கூற்று ஒன்று உண்டு. ஒன்றாகச் சேர்ந்து இறைவணக்கம் செய்யும் குடும்பங்கள் எப்பொழுதும் ஒன்றாகவே இருப்பார்கள். இந்தக்கூற்று இந்து சமயத்தில் எல்லோருக்கும் பொருந்தும். ஒரு பூவையோ, குறைந்த பட்சம் ஒருசிறு இலையையோ இறைவனுக்கு அன்பாக சமாப்பிப்பதை பழக்கித் தரவேண்டும். இந்தப் பழக்கம் குடும்பத்தின் ஆன்மீகப் பின்னணியில் தங்கியுள்ளது. அதோடு சிறு விளக்குப்பூசை, பக்திப்பாடல்கள், பஜனைகள், மந்திரங்கள், வேதநூல்கள் படிப்பது, தியானம் போன்ற பழக்கங்களை தவறாது செய்வது நல்லதாகும். குழந்தைகள் வளரும்போது தாங்களாகவே காலையில் இந்தப்பொறுப்புகளைச் செய்வார்கள். எமது இளைஞர்களை பாடசலைகளில் பிறமத ஊடுருவல்களிலிருந்து தவிர்ப்பதற்கு, வீட்டில் தாங்கள் செய்யும் கூட்டுவழிபாடு மிகவும் உதவியாக இருக்கின்றது என்று எங்களுக்கு பல இந்துக்கள் கூறியுள்ளார்கள்.

**கிழமையில் ஒரு நாளாவது குடும்ப அங்கத்தவாகள் எல்லோரும் சேர்ந்து உள்ளூர் ஆலையத்திற்கு சென்று வணங்க வேண்டும்**

ஒவ்வொரு கிழமையும் கோயிலுக்குச் சென்று தெய்வங்களை வணங்குவதால், இறை ஆற்றலும், ஆசீர்வாதமும், நமக்கு ஒழுங்காக கிடைக்க பெறுகின்றது. இப்படி செய்வதால் மனத் தூய்மையும், ஆன்மீகத் தொண்டு செய்யும் ஆற்றலும் அதிகரிக்கின்றது. வழமையாக கோயிலுக்கு சென்று வருவதால்,எமது வீட்டு வழிபாட்டு அறையிலும்

தெய்வீகசக்தி பெருகுகின்றது. கோயிலுக்குச் சென்று வந்து வழிபாட்டு அறையில் ஒரு சில எண்ணை விளக்கை ஏற்றினாலே கோவலிலுள்ள இறைவனின் சக்தியை நமது வீட்டிற்கு கொண்டு வரமுடியும். இப்படி செய்யும் ஒரு சிறிய செயலால் கோயிலில் இருக்கும் தேவர்களை நமது வீடுகளிற்கு கொண்டுவர முடிகின்றது. அதனால் இறை ஆற்றலும், ஆசீர்வாதமும். எல்லா குடும்ப உறுப்பினர்களுக்கும் கிடைகின்றது.

பகுதி 2

வாழ்கையில் ஆன்மீக நோக்கம்

**வாழ்கையின் தத்துவம் ஆன்மீகப் பாதையில் முன்னேறுவது என்ற நோக்கத்தை கற்பித்தல் வேண்டும்**

இந்து தத்துவத்தின் படி நாம் யாவரும் தூய்மையான ஆன்மாக்கள் ஆகும். அதோடு பூமியில் பல பிறவிகள் எடுத்து, பல அனுபவங்கள் பெற்று, ஆன்மீக தூய்மை பெறுவதே வாழ்கையின் நோக்கமாகும். பல பிறவிகளின் பின்பு ஆன்மாக்கள் மிகவும் தூய்மை அடைந்து இறை பரிமாணம் பெறுகிறது. பூமியில் இருந்து, மீண்டும் பிறவிகள் எடுப்பதில் இருந்து விடுதலை பெறுகிறோம். இதைத்தான் மோட்சம் என்று கூறுகிறோம். வட இந்தியாவில் வசித்த ஒருபெண்துறவி ஆனந்தமாயி அம்மா மிக அழகாக இறை அனுபவத்தை பற்றி கூறுகின்றா். "எவன் ஒருவன் தன்னைத்தான் உணருவதை நோக்கமக உள்ளானோ,அவனையே மனிதன் என்று கூறுவேண்டும். மனிதப்பிறவியின் நோக்கம் இதுதான். இது ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்"

**வாழ்க்கையின் நாலு தத்துவங்களையும் கற்பிக்கவும்.**

இந்து தர்மத்தின்படி வாழ்கையில் இருக்கவேண்டிய நாலு நோக்கங்கள். **கடமை, செல்வம், அன்பு விடுதலை அல்லது மோட்சம்.** மற்ற சமூகத்தவர்கள்மாதிரியே இந்துக்களுக்கு குறிக்கோள்கள் இருக்கின்றன. ஒரு ஆணோ அல்லது பெண்ணோ குடும்பம், **அன்பு, பிள்ளைகள், தொழில் செல்வம்,** நல்ல மதிப்பு போன்ற அனுபவங்களைப் பெற விரும்புகிறார்கள். **கடமை, கண்ணியம், கட்டுப்பாடு,** என்ற மூன்றும் இவர்களது நோக்கங்களை நிறைவேற்ற உதவுகின்றது. இந்த மூன்றோடு அவர்களது நோக்கங்கள் முடிவதில்லை. அத்தோடு ஆன்மா பக்குவநிலை அடைவதற்கு
சூழ்நிலையும், அனுபவமும் கொடுத்து பல பிறவிகளின் பின் விடுதலை பெறுகின்றது. இதை **மோட்சம்** என்று கூறுவோம்.

**உலகில் இளநிலை பக்குவநிலை என இரண்டுவகை ஆன்மாக்கள் இருப்பதை கற்பிக்கவும்.**

நெருப்பில் இருந்து பொறிகள் வருவதுபோல், ஒவ்வொரு ஆன்மாக்களும் இறைநிலையில் இருந்து வந்தவை. ஆன்மீகப் பாதையில் அடிவைத்து திரும்பவும் இறைநிலையிலேயே முற்றுப் பெறுகின்றது. எவரும் இதற்கு விதிவிலக்கல்ல. ஆனால் இந்த பிரயாண இடைவெளியில் வித்தியாசம் இருக்கும். இப்படி எல்லோரும் ஒரே நோக்கில் பிரயாணம் செய்தும், ஏன் மனிதவர்க்கத்தில் பல வேறுபாடுகள்? சிலர் துறவிகளாகவும் சிலர்
கொடியவர்களாகவும் செயல்படுவது மிக தெளிவாகத் தெரிகின்றது. சிலர் மற்ற மனிதர்களுக்கு உதவுவதில் தன்நிறைவு பெறுகிறார்கள். சிலர் மற்றவர்களை வஞ்சிப்பதில் பெருமிதம் அடைகிறார்கள். இந்து சமய தத்துவ விளக்கத்தின்படி நாம் ஒவ்வொருவரும் பிரயாணத்தைத் தொடங்கியுள்ளோம். அதில் சிலர் ஆன்மீக பிரயாணத்தில் தொடக்க நிலையில் உள்ளார்கள். அவர்களை **இளநிலை ஆன்மாக்கள்** என்றும், ஆன்மீக பிரயாணத்தின் முடிவில் உள்ள ஆன்மாக்களை பக்குவநிலை **ஆன்மாகள்** என்றும கூறலாம். எங்கள் பரம்குருவும் ஞானகுருவுமாகிய சிவயோகர்சுவாமிகள், தனது அடியார்கள் மத்தியில் ஒரு முறை கூறும்போது "வாழ்க்கை ஒரு பாடசாலை என்றும்,அதில் சிலர் முழுநிலை பட்டதாரிகள் என்றும், சிலர் தொடக்கநிலைப் பள்ளி மாணவர்கள் என்றும் உதாரணம்" கூறி ஆன்மாக்களின் பக்குவ நிலையை விளக்கினார். இந்துக்கள் ஒரு பொழுதும் நல்லவர் கெட்டவர் என்ற நோக்கில் எவரையும் பார்ப்பதுதில்லை, எல்லோரும் இறைவனின் படைப்பு என்றும், அதில் சிலர் **பக்குவப்படாதவர்கள்,** சிலர் பக்குவப்பட்டவர்கள் என்று மட்டுமே நோக்குவார்கள்.

**மனிதர்களின் மூன்று வகை தன்மைகளை கற்பிக்கவும்**

மனிதனின் தன்மைகளை **மூன்றாகப்** பிரிக்கலாம். அவை **சத்துவம், ரஜோ, தமோ** என்பனவாகும். தமோகுணமுடையவர்கள் எதையும் சிந்தித்து செய்பவர்களாக இருக்கமாட்டார்கள். மிருகத்தன்மை உள்ளவர்களாக இருப்பார்கள். மற்றவர்களை வஞ்சித்து தீமைப்படுத்துபவர்களாக இருப்பார்கள்.

இவர்களை கடைநிலை ஆன்மாக்கள் என்று கூறப்படுகின்றது. இவர்கள் மற்றவர்களை வஞ்சிக்கும் நிலையில் இருந்து தங்களை கட்டுப்படுத்தப் பழக்கிக்கொள்ள வேண்டும். இந்து தத்துவத்தின்படி இவர்களுக்கு தீயவர்கள், என்ற பட்டத்தை சூட்டுவது முறையல்ல. பதிலாக அவர்களை மிருகத் தன்மையில் இருந்து மாற்ற உதவுதல் வேண்டும். குருதேவர் இதை மனதில் படியும் படியாக விபரித்துள்ளார். கொடூரத்தன்மை உடையவர்கள், தங்களது ஆன்மாவின் இயற்கையான தன்மையை சிறிதேனும் அடையாமல் இன்னமும் தாழ்ந்த நிலையிலேயே வாழ்கின்றார்கள். அறிவிலிகள் இவர்களை தாழ்ந்தவர்களாகப் நோக்குகிறார்கள். ஆனால் ஞானிகள் அவர்களை பக்குவபடாத ஆன்மாக்களாகப் பார்க்கிறார்கள்"

பகுதி 3

இந்து தத்துவத்தின் பெருமை

**இந்து சமயத்தின் பெருமையையும் அதனுடைய வாழ்கை தத்துவங்களையும் உங்களின் பிள்ளைகளின் மனத்தில் பதியவையுங்கள்.**

20ம் நூற்றாண்டு மத்தியில் இந்து சமய தத்துவங்கள் உலகம் முழுவதும் அறியக் கூடிய நிலையில் வரத் தொடங்கியுள்ளது. அறிவாளர்கள் மத்தியிலும், வேறு மதத்தவர்கள் மத்தியிலும் இந்து மததத்துவங்கள் வாழ்க்கைக்கு முக்கியமானதாகக் கருதப்பட்டு, அவர்களது வாழ்க்கையில் அவற்றைப் பின்பற்றத் தொடங்கி உள்ளார்கள். இதில் பின்வருவனவும் அடங்கும்.

- சைவ உணவு முறையை பின்பற்றுதல்.
- சூழல்களை பாதுகாத்தலும் அதனால் வரும் வேறுபாடுகளை அகிம்சை முறையில்
- தீர்வுகாணுதலும்
- சகிப்பு தன்மை
- உலகத்தில் உள்ள எல்லோரும் ஒரே குடும்பதினர் என்ற தத்துவம்.
- செய்வினைப் பயனை இறைவனின் செயல் என்று எடுத்தல்.
- மறுபிறவியில் நம்பிகை
- யோகக்கலையையும், தியானத்தையும் பயிற்சித்தல்.
- தனக்குள்ளே இறைவனை தேடுதல்

சுவாமி சின்மயானந்தர் 1951ம் ஆண்டில் தனது முதல் பிரசங்கங்களில் இந்து சமய தத்துவத்தைப் பற்றி மிகவும் ஆழ்ந்த கருத்துக்களைக் கூறினார்.
விஞ்ஞானத்தின் நிறைவுதான் ஒரு உண்மையான இந்து தத்துவம் என்று அழகாக கூறினார். இந்த உண்மையான இந்து தத்துவத்தில் தனிப்பட்ட ஒருவருக்கோ சமூகத்திற்கோ, நாட்டிற்கோ, உலகளாவிய சிக்கல்களுக்கோ, யாவற்றிற்கும் விடை கிடைக்கின்றது. உபநிடதத்தில் கூறும் சனாதன தர்மம்தான் உண்மையான இந்து சமயம்.

**இந்துகளின் சைவ உணவு முறை தனிப்பட்டவர்களுக்கும் சுற்றத்தவர்களுக்கும் நன்மை பயக்கின்றது.**

ஒரு மிருகத்தை உணவிற்காக கொலை செய்யும் போது, அது படும் வேதனையைப் பார்த்து சகிக்க முடியாமல், பலர் பெற்றோரின் அசைவ உணவுப் பழக்கத்தில் இருந்து சைவ உணவு முறைக்கு மாறிவருகின்றார்கள். . "உருளைக்கிழங்கு தவிர்ந்த கண் உள்ள எதையுமே சாப்பிட மாட்டேன" என்று பொதுவாக ஒரு கூற்று இருக்கின்றது. இதுதான் இந்து சமயத்தில் சைவ உணவிற்கு காரணம். இது அகிம்சை எனறு கூறப்படுகின்றது. அதாவது சகமனிதர்களையோ, உயிர்வாழும் மிருகங்களையோ, உடலாலோ, அல்லது மனதாலோ வேதனைப்படுத்துவதிலிருந்து தவிர்த்து, அகிம்சையைப் பின்பற்றும் ஒரு இந்து எப்பொழுதும் சைவஉணவையே விரும்புவான்.

சைவ உணவின் இரண்டாவது காரணம் நமது மனநிலையோடு சம்பந்தப்பட்டவை. அசைவ உணவுகளை சாப்பிடும் போது நமது நரம்புகளில் மிருகத்திற்குரிய தன்மைகள் சேருகின்றன. இது இரசாயனமாற்றமாகி நமது எண்ணங்களை மிருகத்தன்மை உள்ளனவாக பிரதிபலிக்கின்றன. அதோடு பயம், கோபம், பொறுமை சிக்கல், மனப்பாதிப்பு போன்ற கீழ்த்தரமன எண்ணங்களும் உருவாகின்றன. இந்தக் காரணங்களை மனதில் வைத்து பலர் சைவஉணவைப் பின்பற்றுகிறார்கள்.

சைவ நிலையின் மூன்றாவது காரணம். கோளத்தின் இயற்கைத்தன்மை பாதுகாக்கப் படுகின்றது. காடுகளை அழித்தல், நில மேற்பரப்புக்களை செயற்கைப் படுத்துதல் போன்றவைகளால்,பூமியின் இயற்கை தன்மையை இழந்து அசுத்தநீர், தூய்மை அற்ற காற்று என்ற நிலை உருவாக்கப் படுகின்றது. இவை எல்லாவற்றிற்கும் காரணம் நமது உணவில் அசைவத்தை சேர்ப்பதே.

**இந்துகள் பூமித்தாய்க்கும் அதில்வாழும் ஒவ்வொரு உயிர்களுக்கும் ஆழ்ந்த மதிப்புக் கொடுக்கிறார்கள்.**

"உணவிற்கும் பொழுது போக்குக்கும் மிருகங்களை கொலைசெய்யப்படாது" என்ற இந்து தத்துவத்தை உலகத்தில்லுள்ள பல அறிஞர்கள் தற்போது ஏற்றுக் கொள்கிறார்கள். எவ்வளவிற்கு எவ்வளவு மனிதனுக்கு இந்த உலகில் வாழ உரிமை இருக்கின்றதோ அவ்வளவிற்கு அவ்வளவு மிருகங்களிற்கும் உரிமை உண்டு என்று அவர்கள் நம்புகிறார்கள். வேத வாசகம் ஒன்று கூறுகின்றது அகிம்சை என்பது எந்த ஒரு உயிரையும் மனத்தாலோ, பேச்சாலோ, உடலாலோ துன்பப்படுத்தாதே எனறு. கடவுள் படைத்த உனது உடலால், கடவுள் படைத்த இன்னெரு உயிரை அது மனிதனாக இருந்தாலும் சரி கொலை செய்யாதே என்று இன்னெரு வேதக்கூற்று கூறுகிறது. இந்துகள் ஊர்வன, நீரில் வாழ்பவை, பறவைகள் எல்லா உயிர்களையும் பரிசுத்தமானவைகளாக கருதுகிறார்கள். இந்த ரீதியில் பசுவை ஒரு மிகத் தூய்மையான உயிராக மதிக்கிறார்கள். மகாத்மாகாந்தி ஒரு முறை பசுவை மையமாகவைத்து கூறும் போது, ஒரு நாட்டின் பெருமை மனிதாபிமானம் போன்றவை அந்த நாட்டில் மிருகத்தை எப்படி பராமரிக்கிறார்கள் என்பதை வைத்து எடைபோட முடியும் என்று. என்னைப் பொறுத்தமட்டில் பசுவை பாதுகாப்பது என்பது வெறும் பாதுகாப்பு அல்ல. அனாதையான உதவியற்ற ஒரு உயிரை காப்பதாகவே எண்ணுகிறேன். பசு என்பது மனிதனுக்கு அடுத்தபடியான உயிர்.

**வேறுபாடுகளை அகிம்சையால் தீர்ப்பதில் இந்து சமயம் கௌரவிக்கப்படுகிறது.**

பிரிட்டிஸ் ஏகதிபத்தியத்தை எதிர்ப்பதில் மகாத்மாகாந்தி, இந்து தத்துவமான அகிம்சையை பின்பற்றியது இன்று உலகம் முழவதும் வரவேற்கப்படுகின்றது. அகிம்சை வழி வேறும் பலரால் பின்பற்றபட்டுள்ளது. குறிப்பாக, அமெரிக்காவில் டாக்டர். மாட்டின் லூதர் கிங் போன்றவர்கள் இனவேறுபாட்டிற்கு எதிராக, அகிம்சை முறையில் போராடி வெற்றியும் கண்டார்கள். இதற்காக டாக்டர் கிங் 1954ம் ஆண்டில் ஐந்து கிழமைமட்டில் இந்தியாவில் இருந்து, காந்திவழியை பின்பற்றுபவர்களுடன் தொடர்பு கொண்டு, மேலும் தனது அகிம்சை தத்துவத்தை விரிவுபடுத்தி அதை நடைமுறையில் கொண்டுவந்தார்.

**சகிப்புத்தன்மையிலும் உலகம் ஒரே குடும்பம் என்ற தத்துவத்திலும் இந்து மதம் ஒருஆழ்ந்த கருத்தைக் கொண்டுள்ளது**

இந்த21ம் நூற்றாண்டில்,மதங்களுக்கிடையே, நாடுகளுக்கிடையே, இனங்களுக்கிடையே, ஒருவரை ஒருவர் எதிர்ப்பதனால் பல சண்டைகள், சச்சரவுகள் ஏற்பட்டுள்ளன. எதிர்ப்புக்கு மறுபக்கம் சகிப்பு. இதில் இந்து தத்துவம் முன்நிலையில் உள்ளது. சகிப்புத் தன்மையோடு இன, மத. நாடு, வேறுபாடின்றி நாம் எல்லோரும் இறைவனின் பிரதிபிம்பம் என்ற நோக்கில் நம்பிகை உள்ளவர்கள் இந்துகள். சாதி, மதம், இனம், நிறம், பால் என்ற வேறு பாடின்றி எல்லோரையும் மதித்து பாதுகாப்பவர்களே இந்துக்கள். இந்துக்களாகிய நாம் உலகரீதியாக சிந்தித்து எல்லோரையும் மதித்து பாதுகாப்பவர்களே. இந்துக்கள் உலகரீதியாக சிந்தித்து, எல்லோரும் பூமித்தாயின் பிரசைகள் என்ற நோக்கில் வாழ்கிறார்கள். மற்ற இன மத கலாச்சாரம் யாவற்றையும் மதிப்பவர்கள். இந்துக்கள் ஒன்றை சிறுமைப்படுத்தி இன்னொன்றை பெருமைப்படுத்த விரும்பாதவர்கள். இந்துக்கள் ஒருவரையும் நல்லவர் கெட்டவர் எனற நோக்கில் பார்ப்பதில்லை. ஒவ்வொருவரும் இயல்பினால் நல்லவர்கள், நம்மைப் போல இனனொரு ஆன்மா, அதுவும் தூய்மையானது என்ற கருத்துக் கொண்டவர்கள். நெருப்பில் இருந்து தீப்பொறி வருவதைப் போல் எல்லா ஆன்மாக்களும் இறைவனால் உருவாக்கப்பட்டவையே. ஆன்மீகப்பாதையில் அடிவைத்து முடிவில் இறை நிலை அடைவார்கள் என்று எமது உபநிடத வேதம் கூறுகின்றது. உணர்ந்தோ உணராமலோ, இதற்கு எவரும் விதிவிலக்கல்ல. ஒருவரை ஒருவர் தினமும் சந்திக்கும் போது வணக்கம், நமஸ்காரம் என்று கூறும்போது மற்றவரில் இறைவனைக் கண்டு வணங்குகிறோம் என்ற உண்மைத் தத்துவத்தை இந்துக்கள் நடைமுறையில் வைத்துள்ளனர்.

மேலும் ஒருபடியாக "ஒன்றே குலம் ஒருவனே தெய்வம்' என்று வேதம் கூறுகிறது. எல்லோரும் ஆன்மீக நிறைவுபெற்று, வளமுடன் வாழவேண்டும். "உலகம் ஒருகுடும்பம்" என்று கூறும்போது நாம் உலகில் உள்ள ஒவ்வொருவரையும், சந்தோசமாகவும் வெற்றிபெற்றவர்களாகவும், ஆன்மீக நிறைவுடையவர்களாகவும் இருக்க வாழ்த்தவேண்டும். எல்லோரும் சந்தோசமாக வாழவேண்டும் என்ற நல்ல எண்ணம் வேதத்தின் கூற்றை நினைவுபடுத்துகின்றது.

**உலகில் பலர் தற்பொழுது கர்மவினைப் பலனையும், மறுபிறவியையும் ஆழமாக நம்பத்தொடங்கியுள்ளனர்.**

இருபதாம் நூற்றாண்டின் 2ம்பகுதியில் இந்து தத்துவம் மேற்கத்திய நாடுகளில் மிகவும் பிரபல்யம் அடைந்து ஊடுருவத் தொடங்கியது. உதாரணமாக மேற்கத்திய நாடுகளில் உள்ளவர்கள் வாழ்க்கையில் தாம் காணக்கூடிய அனுபவங்களைத், தர்க்கரீதியாக நோக்கும் பொழுது கர்மவினைப்பயனும், மறுபிறப்பும், ஏற்ககூடியதொன்றாகி நம்பிகை கொள்ளத் தொடங்கியுள்ளார்கள். சுருங்கக் கூறின் நாம் **எதைச் செய்கிறோமோ அது திரும்பவும் நம்மை வந்துஅடைகிறது.** இந்து தர்மத்தில் கர்மவினை பிரபஞ்ச நியதியாகிய காரணமும் விளைவும் என்பதாகும். எங்களது நல்ல,கெட்ட,செயல்களின் விளைவுகள் திரும்பவும் எதிர்காலத்தில் எங்களிடம் வந்து அனுபவரீதியாக பாடங்களைத் தந்து நல்லவர்களாக உருவாக்குகின்றது. **மறு பிறப்பு என்பது அழிவற்ற ஆன்மா பக்குவ நிலைக்கு வரும்வரை, திரும்பத் திரும்ப பிறவிகள் எடுத்து இறுதியில் பிறவிப் பெருங்கடலில் இருந்து விடுதலை பெறுவதே ஆகும்.** கர்ம வினைப்பயன், மறுபிறப்பு இவற்றில் தர்க்கரீதியான ஆதாரம் இல்லாது இருந்திருந்தால் இன்று உலகம் ஆன்மீக தர்மம் அற்றதாக இருக்கும். பின் வரும் வினாக்களுக்கு மேற்கூறிய தத்துவங்கள் விடையாக இருக்கும்.

- ஏன் சிலர் இளமையிலே இறக்கின்றார்கள்.
- ஏன் சிலர் மற்றவர்களை விட திறமைசாலிகளாக இருக்கின்றார்கள்.
- ஏன் சிலர் கொடியவர்களாக இருக்கிறார்கள்.
- செயல்களின் வினைகள் என்னவாக இருக்கும்.?

கர்மவினை மறுபிறவியில் நம்பிக்கை, ஆன்மீக வாழ்வுக்கு வழிவகுக்கின்றது. நாம் ஏன் இந்த உலகத்தில் பிறப்பு எடுத்து இருக்கிறோம் என்பது எங்களுக்கு தெரியும். பல பிறவிகள் மூலம் எம்மை தூய்மைப்படுத்தி பக்குவ நிலை அடைவதற்கே ஆகும். வினைச்செயல், நல்லது எது கெட்டது எது அதனால் வரும் விளைவு யாது என்பவற்றை எங்களுக்கு கற்ப்பிக்கின்றது.

**மனிதன் இறைநிலையை அனுபவித்து இறை உணர்வுடன் வாழலாம் என்ற கருத்தில் இந்து சமயம் மிகவும் திடமாக உள்ளது.**

இன்று உலகில் உள்ள ஆன்மீகவாதிகள் பலர் தமக்குள் இறைநிலை அனுபவங்களைப் பெற விரும்புகிறார்கள். கடவுளைக் காண விரும்புகிறார்கள். இவர்களுக்கு இந்து தத்துவம் இந்த வாழ்கையிலேயே அவர்களது நோக்கங்களை நிறைவேற்ற நம்பிகை ஊட்டுவது மட்டும் அல்லாமல், யோகம் தியானம் போன்ற கருவிகளையும் கொடுத்திருக்கின்றது.

அண்மைக் காலங்களில் வாழ்ந்த ஆன்மீக வாதிகளில் சுவாமி விவேகானந்தர் மிகவும் பிரசித்தி பெற்றவர். அவரது வாழ்க்கையில் இறைநிலை அனுபவத்தைப்பற்றிய ஒரு சிறு கதை. சுவாமி விவேகானந்தர் பல்கலைக்கழக மாணவனாக இருந்த பொழுது, கல்கத்தாவில் பல ஆன்மீகத்தலைவர்களிடம் கடவுளைக் கண்டீர்களா? என்று கேட்பார், சிறீ இராமகிருஸ்ண பரமஹம்சரைக் காணும்வரை அவருக்கு எவரும் திருப்தியான பதில் தரவில்லை. இராமகிருஸ்ண பரமஹம்சரை இரண்டாம் முறை சந்தித்த பொழுது கடவுளைக் கண்டீர்களா? எனற கேள்வியை சுவாமி விவேகானந்தர் இராமகிருஸ்ண பரமஹம்சரைக் கேட்டார் அதற்கு அமைதியாக இராமகிருஸ்ண பரமஹம்சர் "ஆம் நான் ஒருவர் தனது உள்ளங் கையில் உள்ள அப்பிள் பழத்தை எவ்வளவு கூர்மையாககாணமுடியுமோ ஏன் அதிலும் கிட்டவாக நான் கடவுளை கண்டேன்' என்றார். அதோடு நில்லாமல் உம்மாலும் கடவுளை காணமுடியும் என்று சுவாமி விவேகானந்தரிடம் ,இராமகிருஸ்ண பரமஹம்சர் சொன்னார். அந்தபதில் ஆழமாகபதிந்து. அன்றே சுவாமி விவேகானந்தர் இராமகிருஸ்ணரைபரமஹம்சரை குருவாக ஏற்றார்.

பகுதி- 4

இந்து சமயமும், உலகத்தின் மற்றமதங்களும்.

**உண்மை ஒன்று பல விதமாக விபரிக்கப்படுகின்றது என்ற வேத தத்துவத்தை சிறார்களுக்கு கற்பிக்கவும்**

சில சமயங்களில் இந்து சமயத்தில் கடவுள்கள் பல என்ற அடிப்படையில் விபரிக்கப் படுகின்றது. படைத்தல் கடவுள் பிரமா, காத்தல் கடவுள் விஸ்ணு, அழித்தல் கடவுள் சிவன் என்று கூறப்படுகின்றது. உண்மை அதுவல்ல. எல்லா இந்துக்களும் யாவற்றிற்கும் மேலான ஒருகடவுளை வணங்குகிறார்கள். வசதிக்காக ஒவ்வொருவர் ஒவ்வொரு பெயரை குறிப்பிடுகிறார்கள். உண்மையில் இந்துக்கள் மற்ற மதத்தவர்கள் போல் பிரபஞ்சத்தின் தலைவன் ஒருவனே என்ற நம்பிக்கை உடையவர்கள். உதாரணமாக நாட்டிற்கு ஒரு அரசன் என்பது போல, உண்மையை விளக்குவதற்கு ஒவ்வொரு பெயர்.

**வேதக்கூற்றின் சரியான கருத்தான உண்மை ஒன்று,**
**வழிகள் பல என்ற தத்துவத்தை சிறார்களுக்கு கற்பிக்கவும்.**

சிலசமயம் இந்துப் பெற்றோர்கள் எல்லா மதமும் ஒன்றே என்று தமது பிள்ளைகளுக்கு கற்பிப்பார்கள். உண்மை ஒன்று வழிகள் பல என்பது இந்து தத்துவத்தை பிரதி பலிப்பது அன்று. உண்மை ஒன்றே கடவுள் ஒருவனே என்ற தத்துவத்தை இந்துகள் நம்பினாலும், எல்லா மதங்களும் ஒன்று என்று எடுக்க முடியாது. ஒவ்வொரு மதங்களும் வேறுபட்டவை. அவர்கள் பின்பற்றும் முறைகள் மாறுபட்டவை.

**உலகில் உள்ள எல்லாப் பிரபல மதங்களும் ஏற்கக் கூடியவை என்றும் அதைப் பின்பற்றுபவர்கள் சரியாக கவனிக்கபடுகிறார்கள் என்பதிலும் இந்து சமயம் வேறுபட்ட கருத்தைக் கொண்டதில்லை.**

இந்துக்கள் எப்பொமுதும் ஒருவரையும் மதம்மாற்ற தெண்டிப்பதில்லை. மதம் மாற்றம் என்பது தாம் பின்பற்றும் மதம் தான் மற்ற எல்லா மதங்களிலும் மேன்மையானது என்றும் எல்லோரும் அதையே பின்பற்ற வேண்டும் என்ற தப்பான கருத்தாகும். இந்துகள் அதற்கு எதிர்மாறாகன கருத்துடையவர்கள் எல்லா மதங்களிலும் அதைபின்பற்றுபவர்களும் அவர் அவர் வழிகளில் நல்லதையே செய்கிறார்கள். அவர்கள் தங்கள் மதத்திலே இருக்கட்டும் என்ற கருத்தைக்கொண்டவர்கள்.

**மற்றமதங்களில் இல்லாத மிக ஆழமான தத்துவங்களைக் கொண்டது இந்துமதம்.**

எல்லா மதங்களும் அடிப்படையில் எல்லோரும் நல்ல குறிக்கோள்களுடன் வாழவேண்டும் என்று கூறுகின்றது. ஆனால் ஒருவர் இறைநிலையை அனுபவிக்க விரும்பும் போது ஒரு சில மதத்தில் தான் ஆழமான கருத்துக்கள் கூறப்படுகின்றன. காலம் காலமாக கத்தோலிக்க ஆச்சிரமங்களில் சில குருமார்கள் இறைநிலை அனுபவிக்க விரும்பி நமது பதஞ்சலிமுனிவரின் யோக சூத்திர தத்துவங்களைப் படித்துப், பின்பற்றி, அதைத் தற்கால சொற்களால் விபரித்து, ஆழ்ந்த தியான நிலையை அடைவதற்கு உபயோகிக்கிறார்கள். காரணம் கத்தோலிக்கமதத்தில் எந்த நூலிலும் தியான நிலை பற்றி எதுவித குறிப்புகளும் இல்லை. தற்காலிக வாக்கியங்களை உபயோகிப்பதில் எல்லோரும் கனனிகள். ஆனால் இந்து சமயம் மிகப்பெரிய கணணிஆகும்.

**இந்து சமயத்தில் கடவுளை நம்புவது, இறை நிலை அனுபவத்தைப் பெறுவதற்குரிய முதல் படியாகவும் கடவுளைக் காண்பதற்குரிய முதல் இரண்டு வழிகள் சகமனிதர்களில் இறைவனைக் காண்பதுமாகும்**

சிலமதங்களில் கடவுள் இருக்கிறார் என்ற முழுநம்பிக்கையே முடிவான கருத்தாகும். ஆனால்

இந்து சமயம், கடவுள் இருக்கிறார் என்ற நம்பிக்கை இறைநிலை அனுபவத்திற்குரியக் முதல் படி என்று கூறுகின்றது. கடவுளைக் காண்பதற்குரிய முதல் சுலபமான இடம் சமயப் பெரியார்களின் உள்ளமே. அவர்கள் முன்னிலையில் இருக்கும் போது, அருள் பேராற்றல் உணரப்படலாம். அவர்கள் கண்களில் ஒளி வீசும். சகமனிதரின் கண்களை ஆழமாகப் பார்கும் போது, கடவுளை காண்பது இரண்டாவது வழியாகும். ஒருவரின் தனிப்பட்டகுணத்தைப் பாராமல் அதற்கு மேலாக அவரில் இறைவனின் பிரதிபிம்பம் தெரிவதைப்பார்க்க வேண்டும். இந்து கலாச்சாரத்தில் ஒரு நல்ல பழக்கம் இருக்கின்றது. ஒருவரைக் காயுணும்போது வணக்கம் அல்லது நமஸ்காரம் கூறும்போழுது அவர்களின் கண்களை ஆழமாக நோக்கி அவர்களில் இறைவனின் சக்தி இருப்பதை உணர்வது.

**கோயில்களிலும் தியானநிலையில் இருக்கும் போது இறைநிலை அனுபவத்தை உணரலாம்.**

மூன்றாவது வழியாக சிலை உருவத்திலே இறைவனைக் காணலாம். இது பக்தி மார்க்கம் என்று கூறுவர். உள் உலகத்தில் இருக்கும் தேவர்களும், கடவுள்களும் சிலை உருவினுள் வந்து நம்மை ஆசீர்வதிப்பார்கள். கோயில்களில் சிலைகள் கடவுளின் உருவமாக பாவிக்கப்படுகின்றது. சில சந்தாப்பங்களில் அடியார்கள் சிலைகளில் கடவுளைக்காண்கிறார்கள். அனேகமாக மந்திரங்கள் பூசைகள், தீபங்கள் காட்டும்போது அடியார்கள் தம்முள் ஒருவித அருள்பேராற்றல் தமது உடலிலும் உயிரிலும் பாய்வதை உணருகிறார்கள். கடவுளைக் காண்பதற்குரிய நாலாவது வழி தியானம். அதவது ஞானமார்க்கம் தம் உள் மனதில் மிகவும் ஆழமாக செல்லும்போது இறைநிலையோடு நம்மில் ஒருபகுதி சேருகின்றது என்ற உணர்வு உண்டாகிறது. இந்தநிலையில் முதல் அனுபவமாக ஒரு அமைதியான பிரகாசமான உணர்வு உண்டாகிறது. அதன் பின் பிரகாசமான ஒளி. அடுத்தபடியாக காலம், உருவம் , பருமன் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்ட இறைநிலை உணர்வு. இதைத் துரியாதீனம் என்றும் கூறுவார்கள்.

**இந்து தத்துவம் ஒருவரின் ஆன்மீக ஒழுங்கு கட்டுப்பாட்டின் மூலம், இறைநிலை அடைவதற்குரிய முக்கியத்துவத்தைக் கூறுகின்றது.**

ஆன்மீக நூல்களை வாசிப்பது ஆன்மீக வளர்ச்சிக்கு உதவியாக இருக்கின்றது. அதற்கு மேலாக ஆன்மீக ஒழுங்கு முறைகளை கடைபிடிக்க வேண்டும். பல வருட ஒழுங்கான கட்டுப்பாட்டு நடைமுறைகளால் நமது உணர்வு, அறிவு, ஆன்மீகத்தன்மை போன்றவை மாறுவதை உணரலாம். எவ்வளவுக்கு எவ்வளவு நாம் ஒழுக்கம் கட்டுப்பாட்டில் தீவிரமாக இருக்கிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு ஆன்மீகப் பாதையில் முன்னேறலாம்.

**இந்து தத்துவத்தின் ஆன்மீகப் பயிற்சியை நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம்**

இந்து சமயத்திலுள்ள சில குறிப்பிடக்கூடிய ஆன்மீக ஒழுங்கு முறைகளைப் பார்ப்போம். மற்ற மதங்களில் குறிப்பிடப்படாத அடிப்படைதத்துவமாகிய அகிம்சை உண்மை, நேர்மை போன்றவற்றில் இருந்து உயர்நிலையில் உள்ள மூச்சுப்பயிற்சி, மூச்சடக்கல், தியானம் போன்றவற்றைக் குறிப்பிடுவது மிகவும் பொருத்தமாகும். இந்து தத்துவத்திலுள்ள விரிந்த ஆன்மீக பயிற்சிகளை நன்நடத்தை,கடமை, பக்தி தியானம் என நான்கு பகுதிகளப் பிரிக்கலாம்.

**ஆன்மீகப் பயிற்சிக்கு நன் நடத்தை ஒரு அத்திவாரமாகும்**

ஆன்மீகப் பயிற்சியில் முதல் பகுதி நன் நடத்தை ஆகும். நன் நடத்தை மற்றப்பகுதிகளுக்கு ஒரு அத்திவாரம் ஆகும். இது நல்ல குணத்தை விரிவாக்கும் என்றும் கூறலாம். நன்நடத்தை தமோ குணத்திலுள்ள, கோபம் மற்றவர்களை வேதனைப்படுத்தல் போன்ற கெட்ட குணங்கள்லிருந்து விடுவிக்க உதவுகின்றது. நன்நடத்தை பற்றி யாமத்தில் சொல்லப்பட்ட பத்து விதிகள்.

1, மற்றவர்களை வேதனைப்படுத்தாமை
2, உண்மையாய் இருத்தல்

3, களவு இன்மை
4, தெய்வபக்தி
5, பொறுமை
6, வைராக்கியம்
7, இரக்கம்
8, நேர்மை
9, அளவு உணவு
10, தூய்மை

மேற் கூறியனவை இரண்டாவது பயிற்சியான நியமத்திற்கு எடுத்துச் செல்கின்றது. அவையாவன பணிவு, திருப்தி, தானம், நம்பிகை, இறைவணக்கம், வேதங்கள் கோட்டல், நுழைபுலம் சத்தியம் விரதம் மந்திரம்ஜெபித்தல் தியானம் தவம்.

இரண்டாவது வகை சேவை

ஆன்மீகத்தின் இரண்டாம் பகுதி சேவை செய்வது. இதைக் கர்மயோகம் என்றுகூறுவோம். வெகுமதி எதிர்பாரமால் தன்னலம் அற்ற தெய்வீகச் சேவையை குறிக்கும். இச்சேவை தற்பெருமை அகங்காரம், இவற்றைப் போக்கி ஆன்மாவை பக்தி நிலைக்கு எடுத்து செல்லும். கர்மயோகத்தில் கோயில் வளாகங்களை சுத்தம் செய்தல் விளக்குகளைச் சுத்தம் செய்தல் , போன்றவை அடங்கும். அதோடு மாதமொரு சமயஅறிவு புகட்டலும் அடங்கும்.

மூன்றாவது பிரிவு பக்தி

ஆன்மீகத்தின் மூன்றாவது பகுதி பக்தி. .இதை பக்தி யோகம் என்று சொல்லாம். கோயில்களில் சிலைகள் மேல் பக்திவைத்து எம்முள்ளே இருக்கும் இறைஅன்பை மேம்படுத்தி நமது புத்தியை மென்மையாக்கி, ஆழ்ந்த தற்பெருமையற்ற நிலையை உருவாக்கலாம். பக்திப்பாடல்கள், தலயாத்திரை, வழிபாடு, அறைகளில் செய்யும் பூசைகள் யாவும் இதில் அடங்கும்.

நான்காம் பிரிவு தியானம்

ஆன்மீகத்தின் நான்காவது பிரிவாக தியானம் குறிப்பிடப்பட்டுள்ளது. இதை இராஜயோகம் அல்லது அஸ்டாங்க யோகம் என்றும் சொல்லப்படும். ஆசனத்தில் ஆரம்பமாகி,அமைதி நிலைக்கு வந்து, பிராணாயாமம் அல்லது மூச்சுபயிற்சி, மூச்சை அடக்கல் போன்றவை மூலம் தியானப்பயிற்சி ஆரம்பமாகின்றது. அடுத்தபடியாக பிரத்தியாகார புலனடக்குதல், விழிப்பு நிலையில் தாரணைக்கு வருதல், மனத்தை ஒருநிலைக்கு கொண்டுவருதல், அதன்பின் ஆக்கினை என்ற தியான நிலைக்கு வருதல். ஆக்கினையில் இருந்து துரியம், துயாதீனம் முடிவில் சமாதிநிலை அடைதல் அதாவது இறைநிலை அடைதல். ஞானயோகம் என்பதுவும் ஒருவித தியானமே. இதில்தர்க்க ரீதியாக உண்மைநிலை, உண்மை அற்றநிலை இவை இரண்டையும் வேறுபடுத்தி பார்ப்பார்கள்.

முடிவு

பிள்ளைகளுக்கு முதல் ஆசான் பெற்றோர்கள். அவர்கள் பல விதங்களில் பிள்ளைகளுக்கு கற்பிக்கிறார்கள். உதாரணம் விபரித்தல், புத்திமதிகூறல், வழிநடத்தல் போன்ற வழிகளால் பெற்றோர் பிள்ளைகளுக்கு முதல் குருவாகிறார்கள். பிள்ளைகளின் ஆழ்ந்த மனத்தில் பதிவது பெற்றோர்கள் சொல்வதும், செய்வதுமே எனவே பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு தகுந்த அணுகுமுறையில் இந்து தத்துவத்தை எடுத்து கூறும்போது அவர்கள் வளர்ந்து இளைஞர்கள் ஆகும்போது இந்து கலாச்சாரத்தை தமது வாழ்க்கையோடு பின்னிப் பிணைத்து வருவதால் நமது கலாச்சாரம் கைவிட்டுப் போவதற்கு எதுவித காரணமும் இருக்க முடியாது.

வணக்கம்

# யோகம், தியானம்

“ ஒவ்வொரு உயிரும் தெய்வத்தன்மையைத் தன்னுள் அடக்கி வைத்துக் கொண்டிருக்கிறது. தனக்கு உள்ளும் புறமும் உள்ள இயற்கைச் சக்தியைக் கட்டுப்படுத்துவதன் மூலம் தெய்வத் தன்மையை வெளிப்படச் செய்வதுதான் வாழ்கையின் இலட்சியம். வினையாற்றுவதன் மூலம் தெய்வத் தன்மையை வெளிப்படச் செய்வதுதான் வாழ்கையின் இலட்சியம். வினையாற்றுவதன் மூலமோ அல்லது பக்தியின் மூலமோ மனவடக்கம் மூலமாகவோ அல்லது தத்துவங்களைத் தெரிந்து கொள்வதன் மூலமாகவோ, இவற்றில் ஒன்றின் மூலமாகவோ பலவற்றின் மூலமாகவோ அல்லது இவை அனைத்தினாலோ அத்தெய்வத் தன்மையை வெளிக்கொண்டு வரச்செய்து விடுதலையடைவாயாக........”என்று சுவாமி விவேகானந்தர் கூறுகிறார் .

“சில வகைப்படுத்தப்பட்ட விதிமுறைகளைக் கையாண்டு உள்ளிருக்கும் தெய்வத்தன்மையை வெளிப்படுத்தி பூரண நிலையை அடைவதே யோகம்” எனறு ஸ்ரீ அரவிந்தர் குறிப்பிடுகின்றார். எனவே அதன் மூலமாக மிருக மனிதன் முன்னேறி சாதாரண மனிதன், உயர்ந்த மனிதன், தெய்வமனிதனாக மாறுகிறான். இந்தப் பாதையின் மூலமாகக் குறுகிய சுயநல எண்ணங்கள் மாறி, பரந்த நோக்கத்தை உடைய சுயநலமற்ற மனப்பான்மை அல்லது பூரணத்துவம்தான் முழுமையான தன்னுணர்வுள்ள நிலை. அளவிட முடியாத ஆனந்தமும் அதுவே ஆகும். எனவே அதை நோக்கி நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் மகிழ்ச்சியும் ஆனந்தமும் உடையது. ஒவ்வொரு மனிதனும் அல்லது சமுதாயமும் எல்லையில்லா இன்பத்தைப் பெறவும் ஆனந்தத்தை அடையவும் உயந்த மனத்திறனைப் பெறவும் முயன்று கொண்டிருக்கின்றனர். இம் முயற்சியில் யோகம் தனிப்பட்ட மனிதனின் நோக்கங்களைப் பூர்த்தி செய்து சமூக முன்னேற்றத்துக்கும் வழி வகுக்கிறது.

யோகத்தில் வேறுபட்ட பல செயல் முறைகள் உள்ளன. ஆனாலும் இந்த வேறுபட்ட முறைகளுக்கு அடிப்படையாக உள்ள ஒற்றுமையை கவனிக்கத் தவறினால் யாரும் அவற்றைத் தவறாகப் புரிந்து கொள்வது இயற்கையே. வேற்றுமையில் ஒற்றுமையைக் காணக்கூடிய உள்நோக்குந்திறன் ஒருவரிடையே வளந்துவிட்டால் எல்லா எல்லா முறைகளையும் தழுவிய யோகத்தின் பரந்த நோக்கமாகிய உண்மை வெளிப்படுகிறது. இந்த ஒற்றுமையின் முக்கியத்துவத்தை சுவாமி விவேகனந்தர் தன்னுடையஉரைகளில் மிகவும் வலியுறுத்தி பேசியிருக்கிறார். இரும்பனைய தசைகளும், உருக்கனைய நரம்புகளும் கொள்ளுமாறு அவர் மனிதர்களை நோக்கி அறைகூவினார். ஸ்ரீஅரவிந்தர் அவர்கள் உடல், மனம், புத்தி, உணர்ச்சி, ஆன்மா ஆகிய அனைத்து நிலைகளின் வளர்ச்சியின் முக்கியத்துவத்தையும் வலியறுத்தினார். துர்க்கா மஞ்சரியில் இனிவரும் யோகப் பயிற்சி சம்பந்தமான தொடர் கட்டுரைகள் மேற்கூறிய எல்லாவற்றின் உயர்ந்த தன்மையையும் உணர உதவியாயிருக்கும். உடல்,மனம், மற்ற முக்கியப் பகுதிகளின் வளர்ச்சியை உண்டாக்கும் யோக நுணுக்கங்களைப் பற்றியதாக இருக்கும்.

முதலில் உடலை தளர்த்தக் கூடியதும் நீட்டுவதுவுமான பயிற்சிகளை செய்வோம். இவற்றுக்கு “சிதிலீகரண வியாயாமா” என்று பெயர். இப்பயிற்சிகள் உடலை நன்றாக வளையும்படியாகச் செய்ய உதவுகின்றன். இவ்விதமாக உடலை வளைத்துச் செய்யும் ஆசனங்கள் உடலில் உள்ள சக்தியைச் சேமித்து அதை அறிவு வளர்ச்சிக்கான சக்தியாக மாற்றுகின்றன. மேலும் இந்த ஆசனங்கள் மன அமைதிக்கான வழியை வகுக்கின்றன.

இரண்டாவதாக உள் உறுப்புகனைத் தூய்மையாக்கும் நுணுக்கங்களைக் கொண்ட“க்ரியா” பயிற்சிகளை செய்யவேண்டும். சுவாசம் இரத்த ஓட்டம் நரம்புகள் ஜீரணம் சம்பந்தமான பகுதிகளைச் சுத்தம் செய்ய இந்த பயிற்ச்சி உதவுகிறது. இதனால் உடலில் எல்லாப் பகுதிகளும் சமமாக வேலை செய்வதன் மூலம் “நாடிகள்” தூய்மையாகின்றன. இம்மாதிரியான பயிற்சிகள் “பிராணாயாமம்” முத்திரை பந்தங்கள் போன்றவற்றைச் செய்ய,பெரிதும் உதவுகின்றன.

இந்தப் பயிற்சிகள் உயர்ந்த நிலையையும் ஆனந்தத்தையும் அடைய உதவும் நுணுக்கமான சாதனைகளுக்கு உங்கனைத் தயார்ப்படுத்துவதாக அமையும்.

இக்காலத்தில் மனிதர்கள், தியானத்தின் மூலம் பல நன்மைகளை அடைய விரும்புகின்றனர் அமைதியை அனுபவம் செய்ய, சக்தி பெற மற்றும் தமது கட்டுப்படுத்தும் திறனை அதிகரிக்க சிலர்

தியானத்தின் உதவியை நாடுகின்றனர் ஆனால் பெரும்பாலோர் அமைதியை அனுபவம் செய்யவும் சதா மன அமைதியுடன் இருக்கவும் விரும்புகின்றனர். அமைதியை குறுகிய காலமே அனுபவம் செய்வதற்கும், குழப்பமான இக்கால சூழ்நிலைகளிலும், சதா மன அமைதியுடன் வாழ்வதற்கும் மிகுந்த வேறுபாடுகள் உள்ளன.

**பிரச்சினைகள், குழப்பங்கள் மற்றும் மனப்பாரமும் மிகுந்த சூழ்நிலைகளில் சதா மன அமைதியுடன் இருப்பதற்கு ஒரே வழி யோகப்பயிற்ச்சியும் தியானமுமேயாகும். தியானப்பயிற்சியில் இரு அங்கங்கள் உள்ளன.**

முதலாவது ராஜயோகம். மிகவும் சகஜமான தியானம். அதனை எவ்வாறு செய்வது? இப்பயிற்சியின் மூலம் எவ்வாறு ஆழ்ந்த அனுபவங்களை அடைவது?

**இரண்டாவது எனது வாழ்வில் ஏற்படும் மனக்கவலைகளுக்கு என்ன காரணம் என்பதை உணர்ந்து இந்த தியானத்தின் மூலம் வழி அடைந்த சக்தியின் மூலம் அதற்கு நிவாரணம் தேடுவது. எனது அமைதியான உணர்வுகளின் மூலம் எனது செயல்களையும் அமைதி நிறைந்தவையாக மாற்றி, நிரந்தரமான மன அமைதியை உருவாக்குவதாகும்.**

இன்று நோய்கள் குடிகொண்டுவிட்டாலும் ஆண்டவன் தந்த இந்த அற்புதமான நூற்றாண்டு காலம் வாழக்கூடிய மனிதஉடல்மீண்டும் நலம் பெறவும், தெய்வீகத்துடன் இவ்வுடலை எடுத்த அமைதியே தன் இயல்புக்குணமுடைய ஆன்மா (இன்று அதை இழந்துவிட்டாலும்) தன்னை அறிந்து கொள்ளவும், அருட்கடலான ஆண்டவனைத் தெரிந்துகொள்ளவும், கட்டுக்கடங்காது தான் நினைத்தபடியே ஆட்டிப்படைக்கும் மனத்தை அடக்கி ஆளவும், யோகம் பிராணாயாமம்
**தியானம் மட்டுமே ஒரே மார்க்கம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்றாகும்**

**அன்னையின் அடியார்களின் நலன்கருதி பிரதி சனிக்கிழமை தோறும் ஆலய மண்டபத்திலே மேற்படி பயிற்சிகள் இலவசமாக நடைபெறுகின்றன. கார்த்திகை மாத நடுப்பகுதியிலிருந்து விரிவான தியான வகுப்புக்கள் நடைபெற ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.**

தொகுப்பு: க.ந

## சிறுவர் விருந்து

### சாணக்கியரின் நீதி

அன்பான பிள்ளைகளே

அன்பு வணக்கம்!

இம்முறை அரசியல் ஞானியான சாணக்கியர் என்பவர் வாழ்வில் நடந்த சிறு சம்பவம் ஒன்றைக் கூறுகிறேன், கேளுங்கள்.

சாணக்கியர் ஒரு பிராமணர். ஆனால் மிகத் திறமான அரசியல் மேதை. இந்தியாவில் மௌரியப் பேரரசு உருவாகக் காரணமாக இருந்தவர். வரலாற்றில் புகழ்பெற்ற சந்திரகுப்தமௌரியன் என்பவனை உருவாக்கியவர். இவருடைய அரசியல் தத்துவங்கள் இன்றும் பயன்படுகின்றன. 'சாணக்கிய நீதி' என்ற நூல் இவரது அரசியல் சித்தாந்தங்களின் தொகுப்பு. சந்திரகுப்தமௌரியன் என்ற பேரரசுக்கு மந்திரியாகவும், குருவாகவும் விளங்கிய இவர் வெறும் ஆலோசகராக மட்டும் இருக்கவில்லை. இந்த அரசனின் பல பொறுப்புகளை ஏற்று நல்லபடி நடத்தியவர்.

ஒரு முறை குளிர்காலம் தொடங்கியிருந்தது. சாணக்கியரின் ஆலோசனைப்படி அரசன் ஏராளமான

கம்பளிப் போர்வைகளை விலைக்கு வாங்கினார். அவற்றை தகுதியான அதாவது உண்மையான ஏழைகளுக்குக் கொடுக்கும் பொறுப்பையும் சாணக்கியரிடமே விட்டுவிட்டான். எனவே: அரசனின் ஏவலாளர் கம்பளிகளை மூட்டைகளாகக் கட்டிச் சாணக்கியரின் குடிசையிலேயே கொண்டு வந்து வைத்து விட்டுப் போயினர்.

ஆமாம்:

சாணக்கியரும் அவருடைய வயதுபோன தாயும் ஒரு சிறுகுடிசையில் தான் வசித்து வந்தனர்.

அந்தக் குடிசையில் சரிபாதிக்கு மேல் கம்பளி மூட்டைகள் நிறைந்திருந்தன. ஒரு சிறு பகுதியில் சாணக்கியரும் அவருடைய தாயும் ஒரு சிறு குடிசையில் தான் வசித்து வந்தனர். நல்ல குளிரான இரவு வேளை. மழை இருட்டு சில திருடர்கள் சாணக்கியரின் குடிசைக்குள் மெள்ளப் புகுந்தனர். அங்கிருந்து தட்டுமுட்டுச் சாமான்களை துழாவித்தேடினர். எவ்வித பணமும் மதிப்புள்ள பொருளும் அங்கு இருக்கவில்லை. புதிய கம்பளி மூட்டைகள் மட்டும் இருந்தன. அவற்றைத் தூக்கிப்போக நினைத்த திருடர்கள் சத்தம் இல்லாமல் அவற்றைச் சுருட்ட ஆரம்பித்தனர்.

அதே நேரம் ஒரு மூலையில் சுருண்டு படுத்திருந்த சாணக்கியரையும், முதிர்ந்த தாயாரைம் அந்தத்திருடர் கவனித்தனர். தரையில் புற்பாயை விரித்து, அந்தப்பழைய பாய்மீது படுத்திருந்த அவ்விருவரும் போர்த்தியிருந்த கம்பளிப் போர்வையோ மிகப்பழையது. ஏராளமாக நைந்து கிழிந்த கம்பளிப்போர்வைகள்.

திருடர்களுக்கு ஏதோ சந்தேகம் ஏற்பட்டு விட்டது. புத்தம்புது கம்பளிப் போர்வைகள் இவ்வளவு இருக்க, ஏன் இப்படி கிழிந்த போர்வையைப் போர்த்தியிருக்கிறார்கள்?

அவர்கள் யோசிக்கும்போதே சாணக்கியர் நித்திரை குழம்பிக் கண் விழித்தார். திருடரைக் கண்டுவிட்டார்.

“நண்பர்களே என்ன விடயமாய் என்னைக் காண வந்தீர்கள்? நீண்ட நேரம் காத்திருக்கிறீர்களா?” என்று வெகு அன்புடன் கேட்டபடி எழுந்துஉட்கார்ந்தார். “அடடா உங்களுக்கு இந்தக் குளிருக்கு ஏதாவது கொடுத்து உபசரிக்க வேண்டுமே..........இப்போ வீட்டில் ஏதுவும் இல்லையே...........” எனக் கவலைப்பட்டார். திருடர் திடுக்கிட்டனர். அவர்கள் மனமும் கசிந்தது.

“ஐயா நாங்கள் திருட வந்தவர்கள். இங்கே எடுத்துப் போக எதுவும்மில்லை, இந்தக் கம்பளிகளைத் தவிர, ஆனால் இந்தளவு நல்ல கம்பளிகள் இருக்கும்போது நீங்கள் இந்தப் பழைய கிழிந்த கம்பளிகளைப் போர்த்தி இருப்பது ஏன்? குளிரால் நடுங்கிக் கிடப்பது ஏன்? இந்தப் புதிய கம்பளிகளின் இரகசியம் என்ன? என்று ஒரு திருடன் கேட்டான்.

சாணக்கியர் குறுநகை செய்தார்.

”அப்பனே! இந்தக் கம்பளிகள் அரசன் அனுப்பியவை. கிழிந்த கம்பளித்துண்டு கூட இல்லாத ஏழைகளுக்கு என அரசனால் வழங்கப்பட்டவை. இதை எடுத்து நான் போர்த்தினால், என்னையும் திருடன் என்று தானே சொல்லவேண்டும்? எனக்குச் சொந்தமில்லாதவை. யாரோ ஏழைகளுக்கு உரியவை. அவற்றை நான் எடுப்பது திருட்டு அல்லவா? அது சரியான செயலா?” என்று கேட்டார்.

திருடர் திகைத்தனர். சிந்தித்துத் திருந்தினர். தாம் இனிமேல் உழைத்து வாழப்போவதாகச் சத்தியம் செய்து வெளியே போயினர். சாணக்கியர் மறுபடி நித்திரை செய்தார்.

ஆக்கம்: அருட்சகோதரி யதீஸ்வரி.

*நன்றி: அருள் ஒளி*

# தமிழத் தாய் மண்ணே வணக்கம்

தொடர்ச்சி................. 4

திராவிட இனத்தவர்கள் பல நிறத்தையும் கொண்டவர்கள் என்றும், இவ்வினமே உலகையாண்டது, என்றும் புதுக்கால நாகரிகம் இவர்களுடையதே என்றும் பல ஆராய்ச்சி அறிஞாகள் கூறியுள்ளார்கள். கடலாட்சி நிலவாட்சி வணிகம் போன்ற பல துறைகளில் ஈடுபட்டு, ஐரொப்பா, இத்தாலி, வட ஆபிரிக்கா, கிழக்காசியா, மேற்கே அத்திலாந்திக், கிழக்கே பசுபிக் தீவுகள் மற்றும் பல நாடுகளிலும் சென்று குடியேறினர். நாகர், இனத்தவர் பண்டைக் காலத்தில் இந்தியாவிலும் இலங்கையிலும் பரந்து வாழ்ந்தனர். லேமூரியாக் கண்டத்தின் பூர்வீகக் குடிகளான இவர்கள் தென்கிழக்காசிய நாடுகள், இந்தியா, இலங்கை, பர்மா, மலேசியா, கிழகிந்திய தீவுகள் மற்றும் சில நாடுகளிலும் பரந்து வாழ்ந்தனர். பாண்டியன் ஊர், சிவன் முதலிய பெயர்கள் 4000 வருடங்களுக்கு முன்பே பல நாடுகளில் வழங்கப்பட்டன. தென் இந்தியாவில் பல நாகர் அரசுகள் இருந்தன என்று பல இலக்கியங்கள் கூறுகின்றன. தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கத்தில் பல நாகர் குலப்புலவர்கள் இருந்தனர். நாகரின் தாய் மொழி தமிழாகும் கி. மு. ஆறாம் நூற்றாண்டில், இலங்கையில் பல பகுதிகளிலும் நாகரின் அரசுகள் இருந்தன. முதலாவது மணிப்பல்லவம் தற்போதைய யாழ்ப்பாணம், இரண்டாவது மாதோடடை தற்போதைய மன்னார் மூன்றாவது கல்யாணி இது தற்போதைய கலனியவாகும். இதில் கடற் பெருக்கால் பன்னிரெண்டில் பதினொரு பகுதி கடலில் ஆழ்ந்து விட்டது.

வுட இலங்கையில் கந்தரோடை என்ற ஊர் நாகரின் தலைநகராக இருந்தது. இயக்கர் இமயம் தொடக்கம் ஈழம் வரை, இந்தயாவின் கிழக்கு பகுதிகளிலும், ஈழத்தின் கிழக்கு, மத்திய பகுதிகளிலும், இயக்கர் வாழ்ந்தனர். இவர்கள் வீரம், ஆண்மை, மிக்கவர்கள் இயக்கர் கோன் இராவணன் மறத்தமிழன், சிறந்த சிவபத்தன், போருக்கு அஞ்சாத பெரு மகன்.

மற்றும் நிருகர், பரதர், திரையர், பானியர், போன்றோர் வாணிபம் காரணமாக பல நாடுகளில் குடியேறி தமது அடையாளத்தை இழந்தனர்.

தமிழர் இவர்கள் குமரி நாட்டிலும், தென்னிந்தியா, இலங்கை மற்றும் சில நாடுகளிலும் வாழ்ந்து அரசாட்சி செய்தனர்.

இணுவைக் குமரன்

## அறிவுக்கு விருந்து

1. மண்ணில் இடப்படும் தண்ணீர் இன்றியமையாதது போலவே, மதம் நல்லொழுக்கத்தில் இன்றியமையாதது ஆகும். மதங்கள் மனிதர்களை ஒன்று படுத்தவே. (மாகாத்மா காந்தி)

2. ஓழக்கம் மரம் போன்றது புகழ் அதன் நிழல், நாம் நிழலைப் பார்த்து மரம் என்று என்று எண்ணுகிறோம் மரம் தான் நிலையானது. அதன் நிழல் அல்ல.(ஏப்பிரகாம் லிங்கன்)

3. மனம் கொண்டதே மாளிகை நரகத்தைச் சொர்கமாகக் காட்டுவதும், சொர்க்கத்தை நரகமாகக் காட்டுவதும் அதுவே (மில்டன்)

4. அமைதியான மனமே உங்களின் மிக முக்கிய மூலதனம் அதுவே எல்லா வெற்றிகளையும் கொண்டு வந்து தரும் (சுவாமி விவேகானந்தர்)

# நவராத்திரி

இந்துசமயம் பல பிரிவுகளைக் கொண்டது. அவை சைவம் சாக்தம் வைணவம் காணாபதியம் கௌமாரம் சௌரம் என அழைக்கப்படும். சக்தியை முழுமுதற் கடவுளாகக் கொண்டு போற்றப்பட்ட மதம் சாக்த மதம் ஆகும். பின்னர் சைவ மதத்துடன் சாக்த மதம் இணைந்து காணப்பட்டது.
உலக அன்னையாகிய சக்தியைப் போற்றிக் கடைப்பிடிக்கப்படும் விரதங்கள் பல. இவற்றுள் முதன்மையான விரதம் நவராத்திரி விரதமாகும். இதனை விழாவாகவும் கொண்டாடுவர். புரட்டாதி மாதம் வளர்பிறையில் சுக்கில பட்சத்தில் முதல்நாள் ஆரம்பமாகி நவமி வரை ஒன்பது நாட்கள் நவராத்திரி அனுஷ்டிக்கப்படும். நவம் என்றால் ஒன்பது என்று பொருளாகும்.

உலகங்கள் அனைத்தையும் படைத்துக் காத்து அழித்துத் தானேயாகி நிற்கும் பொருளே பரம்பொருள். பரம்பொருளை சிவனாகவும் சக்தியாகவும் போற்றியது இந்துமதம்.எண்ணத்தை அல்லது செயலைக் சிவனாகவும் செயலைச் செயற்படுத்தும் கருவியைச் சக்தியாகவும் பேணியது இந்துமதம்.
எந்தவொருவிடயமாயினும் பல முறை சிந்தித்தே செயற்படுத்த வேண்டும். ஒரு முறைக்கு ஒன்பது முறை சிந்தித்து ஒரு கருமத்தை செயற்படுத்தவேண்டுமெனக் கூறுவதுண்டு.எண்ணத்தின் கருவியாகி சிவனுக்கு ஒரு இராத்திரி.எண்ணத்தை செயற்படுத்தும் சக்திக்கு ஒன்பது ராத்திரி என்ற அடிப்படையில் எழுந்த கருத்தாக இது அமையும்.

உணவு உடை உறையுள் என்பன ஒருவனுடைய அடிப்படைத் தேவைகளாகும். இவற்றைப் பெற்றுக் கொள்ளத் தேவையானது செல்வம். இச் செல்வத்தை தொழில் மூலமே பெற்றுக்கொள்ள முடியும். தொழில் ஒன்று தேட சிறந்த அறிவு தேவை. அறிவைத் தருவது கல்வி. கல்வியினால் பெற்ற செல்வத்தை பேணிக் காக்க வீரம் தேவை. எனவே கல்வி செல்வம் வீரம் மூன்றும் மனிதனுடைய நல்வாழ்க்கைக்கு அத்தியாவசியமானதாக நம்முன்னோர் கருதினர்.

கல்விக்குரிய தெய்வமாகச் சரஸ்வதியும் செல்வத்திற்கு அதிபதியாக இலக்குமியும் வீரத்தைக் கொடுக்கும் சக்தியாக துர்க்கையும் போற்றிவணங்கப்படுகின்றனர். இந்த ஒன்பது நாட்களை நவராத்திரி என்று அழைப்பர்.நவராத்திரி என்றால் ஒன்பது இராத்திரி என்று பொருள்.
நவராத்திரியில் முதல் மூன்று நாட்களுக்கும் வீரத்தையும் தைரியத்தையும் தரும் துர்க்கையைப் போற்றி வணங்குவர். அடுத்து வரும் மூன்று நாட்களும் செல்வத்தை வேண்டி மகாஇலக்குமியை வணங்குவர்.

இறுதி மூன்று நாட்களும் கல்வி கலை ஞானங்களை வேண்டிச் சரஸ்வதியை வழிபடுவர். பத்தாவது நாளை வெற்றியைக் கொடுக்கும் நாளாகக் கருதி விஜயதசமி என்று போற்றி வழிபடுவர்.
நவராத்திரி பூசையைக் கும்பபூசை என அழைப்பதும் உண்டு. கும்பம் வைப்பது என்பது விரதங்கள் பூசைகளுக்குப் பொதுவானது. ஆனால் நவராத்திரியில் கும்பம் வைப்பது விஷேசமானது. ஆரம்ப காலங்களில் நவராத்திரியை துர்க்கா பூசை என்றே அழைத்தனர். சில இடங்களில் பத்து இரவுகள் கொண்டாடப்படுவதால் தசராத்ததிரி என அழைப்பதும் உண்டு. வங்காள மக்கள் காளி துர்க்கா பூசை என்றும் உத்தர பிரதேச மக்கள் ராமலீலா என்றும் மைசூர் மாநில மக்கள் சாரதா நவராத்திரி என்றும் வழிபடுவர் இவ்வாறாகப் பல்வேறு முறையில் வழிபட்டாலும் அனைவரும் சக்தியைப் போற்றி வணங்குவதே அடிப்படையாகக் காணப்படுகிறது.

சூரிய பகவான் கோள் சஞ்சார முறைப்படி ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு ராசியை அடைவதாகச் சோதிடம் கூறியுள்ளது. புரட்டாதி மாதத்தில் சூரியன் வீடாகும். புதனைப் புத்திக்காரன் அதாவது அறிவை வளர்ப்பவன் எனப் போற்றுவர். எனவே கல்வி செல்வம் வீரத்தை வேண்டி வழிபட ஏற்ற மாதமாகப் புரட்டாதி மாதத்தைத் தெரிவு செய்தனர்.
நவராத்திரி தினமாகிய ஒன்பது நாட்களிலும் மகேஷ்வரி கௌமாரி வாராகி மகாலக்சுமி வைஷ்ணவி இந்திராணி மகாசரஸ்வதி நாரசிம்மி சாமுண்டி என்ற வரிசையில் தேவியரை வணங்கும் முறை காணப்பட்டது. தென் இந்தியா இலங்கை போன்ற நாடுகளிலும் மூன்று தேவியரை வணங்கி நவராத்திரியைக் கொண்டாடும் முறையே காணப்படுகிறது.
முதல் மூன்று நாட்களிலும் ஸ்ரீதுர்க்காதேவியை வணங்கி வழிபடுவர். வளமையையும் செழுமையையும் தரவல்ல சக்தி துர்க்கை வீர உணர்வைத் தருபவளாகச் சித்தரிக்கப்படும் துர்க்கை பற்றிய குறிப்புகளைப் பண்டைய இலக்கியங்களிலே காண முடியும். சிவனின் சக்தியாகிய உமாதேவியே ஸ்ரீதுர்க்கை மலையத்துவசனின் அவதாரம் எடுத்தமையினால் துர்க்கை மலைமகள் எனப்

போற்றப்படுகிறாள். இடையில் வரும் மூன்று நாட்களும் செல்வத்திற்கு அதிபதியான இலக்குமிதேவியை வழிபடுவர்.சிவப்பு அல்லது பொன்னிற வடிவுகொண்டு செந்தாமரையில் வீற்றிருக்கும் சக்தியைத் திருமகள் என்றே போற்றுகின்றோம். அழகு செம்மை தியாகம் ஆகிய பண்புகளைக் கொண்ட விஷ்ணுவின் சக்தியாக திருமகளைப் போற்றுவர். பூவுல வாழ்க்கைக்குத் தேவையான செல்வத்தைக் கொடுக்கும் சக்தியாக திருமகளை வணங்குவர்.

இறுதி மூன்று நாட்களும் அறிவைக் கொடுக்கும் சக்தியாகிய சரஸ்வதியைப் போற்றித் துதிப்பர். சரஸ்வதி வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு வெள்ளைக் கமலத்தே வீற்றிருக்கும் சக்தியென துதித்து வணங்குவர். சுரஸ்வதியின் வெள்ளை நிறம் மாசின்மை வாய்மை தூய்மை வடிவானது. ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் அருளும் சக்தியை கலைமகள் எனப் போற்றி வழிபடுவர்.

நவராத்திரி விழா மிகச் சிறப்பு வாய்ந்தது. சிறுவர் தம் கல்வி சிறக்கவும் பெரியோர் தம் தொழில் சிறக்கவும் தேவியை வேண்டிக் கொண்டாடுவர். இதனை விளக்குவது போல காணப்படுவது பத்தாவது நாள் கொண்டாடப்படும் விஜயதசமித் திருநாளாகும். விஜயம் என்பது வெற்றி என்ற பொருளைத் தரும். விஜயதசமியை வெற்றிவிழா எனவும் அழைப்பர். இந்த நாளிலே ஆரம்பிக்கப்படும் கருமங்கள் யாவும் வெற்றியைத்தரும் வித்யாரம்பம் என்னும் ஏடு தொடங்கும் வைபவம் நடைபெறும். புதிதாக தொழில்களை இந்த நாளிலே ஆரம்பிப்பர். விஜயதசமியன்று சரஸ்வதி பூசையில் வைத்து வழிபட்ட நூல்களைப் படித்து மகிழ்வர். தங்கள் தொழிலுக்கு உரிய கருவிகள் ஆயுதங்கள் எழுதுகோல் போன்றவற்றை தேவியின் பாதத்தில் வைத்து வணங்கி வழிபட்டு தேவியின் அருளை வேண்டுவர்.

நவராத்திரி விழாவோடு தொடர்புடைய மகிஷாசுரவதம் வன்னி வாழைவெட்டு என்பவை இன்றும் இந்து ஆலயங்களில் நடைபெற்று வருகின்றன. வன்னி வாழை வெட்டு என்பது புராணக் கதையோடு தொடர்புடையது.மகிஷாசுரன் என்னும் அரக்கன் தனது ஆணவத்தால் எல்லோருக்கும் அழிவை ஏற்படுத்தித் துன்புறுத்தி வந்தான். முனிவர்களும் ஏனையோரும் துன்பம் தாங்காது பரம்பொருளாகிய இறைவனிடம் முறையிட்டனர். இவர்களின் துயர் துடைக்க அன்னை பராசக்தி துர்க்கை வடிவெடுத்து மகிஷாசுரனை அழித்து அனைவரையும் காப்பாற்றி அருள்புரிந்தான்.

அதர்மத்தை அழித்துத் தர்மத்தை நிலைநாட்டியதை நினைவு கூருவதே வன்னி வாழை வெட்டாகும். தர்மம் அன்பு சமாதானம் இவற்றை நிறுவிய வன்னிவாழைவெட்டு பல அரிய தத்துவங்களை கொண்டது. பெரும்பாலான ஆலயங்களில் வாழைவெட்டும் நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக கொண்டாடப்படும்.

அரக்கனாக வாழையை உருவகித்து அவனை வதம் செய்து அருளும் பாவனையில் வாழைவெட்டு இடம் பெறுகிறது. அனைவரும் குதூகலமாக அவ்விழாவிலே கலந்து கொள்வர். வாழைவெட்டின் அடிப்படைக்கருத்து மிகவும் ஆழமானது. தேவி பராசக்தியானவள் அதர்மத்தின் உருவத்தோடு மனித மனத்திலே குடிகொண்டுள்ள மகிடமாகிய தாசம குணத்தை ஒழித்து அமைதியான சாத்வீக குணத்தை அருளிய திருநாளே வாழைவெட்டு என்பது மிகவும் பொருத்தமுடைய அறிவு வழிக் கருத்தாகும்.

விஜயதசமியன்று வன்னிமரத்தை வழிபாடு செய்யும் வழக்கமொன்றுண்டு. வன்னிமரத்தோடு தொடர்புடைய பல கதைகள் காணப்படுகின்றன. ஒரு சமயம் உமாதேவியார் வன்னிமரத்தின் கீழ் இளைப்பாறியதாகவும் இராமன் சீதையைக் தேடிப் புறப்பட்டுச் செல்லுமுன் வன்னிமரத்தை வலம் வந்து புறப்பட்டு சென்றதாகவும் கூறுவர். இவ்வாறே பாண்டவர்கள் நாடிழந்து வாழவேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது பாதுகாப்புக் கருதி தங்கள் ஆயுதங்களை ஒரு வன்னி மரப்பொந்திலே வைத்திருந்தனர். பகைவர்கள் தங்களை இனங்காணாது காப்பாற்றும்படி துர்க்கையை வேண்டினர். அஞ்ஞாதவாதம் முடிவுற்று வன்னி மரப்பொந்திலுள்ள ஆயுதங்களை வெளியே எடுத்து தங்களைக் காப்பாற்றிய துர்க்கையை போற்றி ஒன்பது நாட்களும் வழிபாடு செய்தனர். புத்தாம் நாளாகிய விஜயதசமியன்று ஆயுதங்களை கையிலெடுத்து தேவியை வணங்கி மீண்டும் தமது நாடேகினர். இக்கதைகள் இராமாயண மகாபாரதத்தோடு தொடர்புள்ளவை. பஞ்சபாண்டவர்கள் ஸ்ரீதுர்க்கா நட்சத்திர மதலிகா துதி என்ற இருபத்தியேழு சுலோகங்களைக் கொண்ட துதியைப் பத்து நாட்களும் ஓதி வழிபட்டுப் பல பேறுகளைப் பெற்றனர். வன்னி மரத்தினை நினைவுகூர்ந்து அன்னையின் அருளைப் போற்றும் வகையில் வன்னிமரக்கிளையொன்றை வாழைமரத்திலே கட்டிவைத்து பூசை செய்து வாழைவெட்டு நடைபெறுவதாகவும் கூறுவர். இவ்வாறு இடம் பெறுவதை மானம்பூ என அழைப்பர். வெற்றிகளையும் வளங்களையும் அருளவல்ல நவராத்திரிவிரதம் மாநோன்பு என்று அழைக்கப்பட்டது. இச் சொல் மருவி வாழைவெட்டு அன்று நடைபெறும் விழாவை மானம்பூ என்று அழைத்து இருக்க வேண்டும். நுவராத்திரி

விழாவை மாநோன்பு விழா என்று அழைப்பதும் பொருத்தமுடையது.

நவராத்திரி விழா ஆலயங்களில் மட்டுமன்றி வீடுகளிலும் சிறப்பாக கொண்டாடப்படும். ஆலயங்களிலும் வீடுகளிலும் கொலு வைப்பது இவ்விழாவின் சிறப்பம்சமாகும். வீடுகளிலே பல்வேறு அமைப்புகளிலே கொலு வைப்பர். படிகளைக் கொண்ட விசேடமான பீடங்களிலே விதம் விதமான பொம்மைகள் அல்லது பதுமைகளை அடுக்கி அலங்கரிப்பதே கொலு என அழைக்கப்படும்.
கொலு வைக்கப்படும் படிகளின் எண்ணிக்கை மூன்று ஐந்து ஏழு ஒன்பது என ஒற்றைப்பட அமைக்கப்பட வேண்டும் கொலுவில் அருகிலே கும்பம் சுவாமிப்படங்களை வைத்து விளக்கேற்றித் தினமும் நிவேதனம் செய்து பூசிப்பதே முறையாகும். நிவேதனமாக கடலை கற்கண்டு ஆகியவற்றை படைத்து வணங்குவது வழமையாகும். தினமும் வழிபாடு செய்யும்போது அவரவாக்குரிய தோத்திரங்களை கூறி வழிபட வேண்டும். சுரஸ்வதிதேவி புத்தகங்களில் உறைவதாக கருதுவர். மகாநவமியாகிய ஒன்பதாம்நாள் இசைக்கருவிகள் கலைப்பொருட்கள் தொழிற்கருவிகள் பூசையில் வைத்து வழிபடுவது மரபாகும்.

நவராத்திரி காலத்தில் எண்ணை வைத்து நீராடுதல் விலக்கப்பட வேண்டுமெனப் புராணங்களில் கூறப்படுள்ளது. புரட்டாதிச் சனிவிரதம் நவராத்திரி காலங்களில் வருவதும் உண்டு.நரவாத்திரி விரதம் அனுஷ்டிப்போர் புரட்டாதிச் சனிவிரத்ததை அனுஷ்டிக்கும் போது எண்ணெய் தேய்த்து நீராடுவதைத் தவிர்க்கவேண்டும்.எனினும் எண்ணெய் எரித்து சனிவிரதம் வருமாயின் எள்ளெண்ணை எரித்து வழிபாடு செய்தல் தவறில்லை எனவும் கூறியுள்ளனர். நவராத்திரி காலங்களில் கொல்லுதல் புலால் உண்ணல், மது அருந்துதல் .போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும். முறையாக விரதமிருப்போர் முதல் எட்டு நாட்களிலும் பகலில் உணவருந்தாது விரதமிருந்து இரவில் பூசை முடிந்த பின் பால் பழம் பலகாரம் என்பன உட்கொள்வர். நவமியாகிய ஒன்பதாம் நாள் உபவாசம் இருந்து பத்தாம் நாளாகிய விஜயதசமியன்று காலை எட்டரை மணிக்கு முன் பாரணை செய்ய வேண்டும். பாரணை என்பது இறைவனை வணங்கி அறுசுவை உணவைச் சமைத்து பிறருக்கும் கொடுத்து குடும்பத்தினரோடு உணவருந்தி விரதத்தை நிறைவு செய்வதாகும். உபவாசமிருந்து அதன் பின்பு உணவை உண்ணுதல் பாரணை எனக் கருதப்பட்டது.

நவராத்திரி விரதத்தை உபவாசமிருந்து கடைப்பிடிக்க முடியாதவர்கள் எட்டுநாட்களும் ஒருநேர உணவுண்டு ஒன்பதாவது நாள் உபவாசமிருந்து பத்தாவது நாள் பாரணை பண்ணி விரதத்தை நிறைவு செய்யலாம்.நவராத்திரி விரதத்தை முறையாக அனுஷ்டிப்போர் வீரம் செல்வம் கல்வி ஆகிய பேறுகளைப் பெற்று உயர்வடைவர். புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் நவராத்திரி விழாவை கோலாகலமாகக் கலாச்சார விழாவாகக் கொண்டாடி வருகின்றனர். ஆலயங்கள் வீடுகள் பொது இடங்களில் அழகாக கொலு வைத்து சிறுவர்களுக்கு அவற்றின் அர்த்தங்களை விளக்கி உதவ வேண்டும். தமிழ் சமூகம் ஒன்றிணைந்து அழகிய கொலு மேடைகளை அமைத்து பல இனத்தவரும் கண்டு களிக்கும் வகையீல் ஏற்பாடு செய்ய வேண்டும்.

நவராத்திரி விழாவை தமிழர்கள் தமது வசதிக்கேற்ப வீடுகளில் கொண்டாடவேண்டும். இதனால் சிறுவர்கள் மனதில் விழாக்கள் விரதங்கள் பற்றிய மரபுகளை எதிர்கால சந்ததியினரும் பின்பற்ற வாய்ப்பு ஏற்படும்.தேனினும் இனிய தமிழ்மொழியும் வாழ்க்கையை செம்மைப்படுத்தும் இந்து மதமும் தாய் தந்தையரிடமிருந்து பிள்ளைகள் பெறும் அரும்பெரும் செல்வங்களாகும்.

நன்றி: தமிழரும் இந்து மரபுகளும்

# கந்தசட்டி விரதம்

குறிஞ்சி என்பது மலையும் மலைசார்ந்த இடமுமாகும். வளங் கொழிக்கும் குறிஞ்சியிலே குடி கொண்ட தமிழ்க் கடவுள் முருகக்கடவுள். மக்கள் துயர் துடைத்து உறுதுணையாக விளங்கிக் கலியுக தெய்வமாகக் காட்சியளிப்பவன் முருகன். முருகன் என்றால் அழகன் என்னும் பொருளும் உண்டு.

வீரமும் அழகும் காதலும் கனிவும் கருணையும் கொண்டு தமிழரின் தலமைத் தெய்வமாக விளங்குபவன் முருகன். முருகனுக்குரிய எண்ணற்ற திருநாமங்கள் அவனின் தெய்வீகப் பெருமையைப் புலப்படுத்துவனவாகக் காணப்படுகின்றன.

கார்த்திகைப் பெண்கள் வளர்த்த காரணத்தால் கார்த்திகேயன் என்றும் சிவனுக்கும் உமைக்கும் நடுவில் சோமாஸ்கந்த வடிவத்தில் அமர்ந்திருப்பதால் கந்தன் என்றும் சரவணபவ என்னும் ஆறு அட்சரங்களை உடையவன் என்பதால் சரவணபவன் என்றும் அழகிய தோற்றமுடையவன் என்பதால் முருகன் என்றும் அழைத்தனர். சேந்தன் சேயோன் செவ்வேள் குமரன் ஆறுமுகன் குமரகுரு சிவகுரு எனப் பல பெயரிட்டு குழந்தைத் தெய்வமான முருகனைப் போற்றி வணங்கினர்.

முருக வழிபாடும் அதனோடிணைந்த விழாக்களும் விரதங்களும் உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களால் பாரம்பரியமாகப் பின்பற்றப்பட்டு வருகின்றன.முருகனுக்குரிய சிறப்பான விரதங்களுள் கந்தசஷ்டி விரதம் மிகவும் மேன்மையானதாகும்.

கந்தபுராண கலாச்சாரத்தில் ஊறித் திளைத்த இந்துத் தமிழர்கள் கந்தசஷ்டி விரதத்தை பக்திபூர்வமாகக் கடைப்பிடிப்பர்.தீபாவளி அமாவாசையை அடுத்து வளர்பிறை பிரதமை முதல் சஷ்டி ஈறாகவுள்ள ஆறுநாட்கள் கந்தசஷ்டி விரத நாட்களாகும்.

முருக பக்தர்கள் இவ்விரதத்தினை இதய சுத்தியுடன் கடைப்பிடிப்பர். இவ்விரதத்தினை உபவாசமிருந்தே பெரும்பாலானோர் கைக்கொள்வர். தென் இந்தியா இலங்கை போன்ற நாடுகளிலுள்ள இந்துத் தமிழர்கள் முருகன் ஆலயம் சென்று அங்கு தங்கியிருந்து விரதமிருப்பர். ஆலயம் சென்று உபவாசமிருப்போர் ஆலயத்தில் வழங்கப்படும் பானகம் என்பது சர்க்கரை எலுமிச்சம் பழச்சாறு இளநீர் என்பன கலந்து தயார் செய்யப்படும் நீராகாரமாகும். பசி தாகம் இவற்றைத் தணிக்கப் பானகம் உதவும். பட்டினி கிடப்பதால் ஏற்படும் வாய்வு பித்தம் போன்றவற்றை நீக்கி உடற்சமநிலையைப் பேண பானகம் அருந்துவர்.

கந்தஷட்டி ஆறு நாட்கள் கடைப்பிக்கப்படும் விரதமாகும். நோன்பின் ஆரம்ப நாளன்று தர்ப்பை அணிந்து காப்புக் கட்டிச் சங்கற்பம் செய்து ஆறு நாட்களும் விரதமிருப்பர். இறுதி நாளன்று காப்பை கழட்டித் தர்ப்பையுடன் சேர்ந்து தட்சணைகளுடன் அர்ச்சகரிடம் சமர்ப்பிப்பார். ஏழாம் நாள் பாரணைப் பூசை கண்ட பின்னர் பாரணை செய்து விரதத்தினைப் பூர்த்தி செய்வர்.

ஆறு நாட்களும் நோன்பிருக்க முடியாதவர்கள் முதல் ஐந்து நாட்களும் இரவு ஒரு நேரம் பால் பழம் பலகாரம் உண்டு.ஆறாவது நாள் உபவாசமிருந்து விரதத்தினை மேற்கொள்ளலாம். இவ்வாறு செய்ய இயலாதவர்கள் ஐந்து நாட்களும் பகல் ஒருபொழுது உணவு உண்டு ஆறாம் நாள் இரவு பால் பழம் உண்டு விரதத்தினை மேற்கொள்ள முடியும்.

இவ்விரதத்தினை ஆறுவருடங்கள் அல்லது பன்னிரண்டு வருடங்கள் கடைப்பிடிப்பது பயனுடையதாகும். இவ் விரதம் சகல செல்வங்களையும் சுகபோகங்களையும் அளிக்கவல்லது. குழந்தைப் பேற்றை அளிக்கவல்ல சிறந்த விரதமாகக் கந்தஷட்டி விரதம் போற்றப்படுகிறது. சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும் என்பது முதுமொழி. இம் முதுமொழியின் மேலோட்டமான கருத்தினின்றும் தத்துவார்த்தமான கருத்து வேறுபட்டது. ஆழமான உடபொருள் பொதிந்தது. சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும் என்பதற்கு கருப்பையாகிய அகப்பையிலே குழந்தைச் செல்வம் உண்டாகும் என்றும் பொருள் கூறுவர்.

கந்தஷட்டியோடு தொடர்புடைய சூரன்போர் பிரபலமானது. கந்தஷட்டியின் ஆறாம் நாளாகிய சஷ்டித்திதியிலே சூரசம்ஹாரம் நடைபெறும். இதனை சூரன் போர் என்றும் குறிப்பிடுவர். சூரன் போர்

பெருவிழாவாக நடைபெறும். முருகனுக்கும் சூரனுக்கும் யுத்தம் நடைபெறுவதான பாவனையில் இந்நிகழ்ச்சி இடம் பெறும். இச் சம்பவத்தைச் சித்தரிக்கும் புராணக் கதையொன்றுண்டு.

சூரன் சிங்கன் தாரகன் ஆகிய மூன்று அசுரர்கள் நெடுங்காலமாகத் தேவர்களையும மனிதர்களையும் துன்புறுத்தி வந்தனர். இதனை அறிந்த சிவபிரான் தனது சக்தியையே முருகப்பெருமானாக அவதாரம் செய்ய வைத்தார்.முருகக் கடவுள் சூரன் முதலானோருடன் ஆறுநாட்கள் போரிட்டு இறுதியில் அவர்களை வென்றார். இறைவனின் கருணையை விதந்து இப்போர் நிகழ்ந்த காலமாகிய ஐப்பசி மாத வளர்பிறையில் வரும் முதல் ஆறு நாட்களையும் கந்தஷட்டி விரத நாட்களாகப் போற்றி வழிபட்டனர்.

இப் புராணக் கதை கந்தபுராணம் என்னும் நூலிலே கூறப்பட்டுள்ளது. பதி பசு பாசம் என்னும் முப் பொருள் உண்மையைக் கந்தப்புராணம் விளக்கியுள்ளது. சூரன் சிங்கன் தாரகன் என்போர் முறையே ஆவணம் கன்மம் மாயை ஆகிய மும்மலங்களாகவும் அசுரர்களால் பாதிக்கப்பட்டோர் பசுக்கள் எனவும் கூறப்பட்டுள்ளது. மூன்று அசுரர்களையும் அழித்துப் பின் தேவர்களைச் சிறைமீட்டுக் காத்தமை மும்மலம் அழிந்த பின்னர் உயிர்கள் அடையும் வீடுபேற்றினைக் குறிப்பதாகத் தத்துவார்த்தமாகக் கூறப்பட்டுள்ளது.

சூரனுக்கு நல்லறிவு புகட்டித் தீயவை புரிந்தாரேனும் முருகவேள் திருமுன்னுற்றால் தூயவராவர் என்பதற்கிணங்க அவனை மன்னித்துச் சூரனை இரு கூறாக்கி சேவற் கொடியாகவும் மயில் வாகனமாகவும் ஏற்று உயர்ந்த நிலையைக் கொடுத்தருளினார். இக்கதையிலிருந்து இறை அருளையும் பல்வேறு தத்துவங்களையும் அறிந்து கொள்ளமுடியும். முருகப்பெருமான் சூரனை அழித்த சூரசம்ஹார நிகழ்ச்சி உலகிலே காணப்படும் திமைகளைக் களைந்து தீமை புரிந்தவர்களையும் தனது அருளினால் நல்லவர்களாக மாற்றிஅ ருள் புரிந்த முறையினை விளக்குகிறது.இறைவனின் நோக்கம் தீமைகளை அழிப்பதேயன்றித் தீயவர்களை அழிப்பதல்ல. தீயவர்களும் தமது தவற்றை உணர்ந்து திருந்த இறையருள் துணை நிற்கும் என்பதனையே சூரசம்ஹாரம் விளக்குகிறது.

கந்தபுராணம் கூறும் புராணக்கதையை சங்கரன் பிள்ளை சட்டியில் மா வறுத்தார் என்று சிலேடையாக கூறுவர். சங்கரன் பிள்ளை என்றால் சங்கரனாகிய சிவனின் பிள்ளையாகிய முருகன் சட்டியிலே கந்தஷட்டியிலே மாவறுத்தார். மாமரமாக நின்ற சூரனை தனது வேற்படையினால் இருகூறாக அறுத்தார் எனப் பொருள்படும். கந்தபுராணக்கதைகள் பேருண்மைகளை உருவகப்படுத்தி மக்கள் நல்வழியில் வாழ வகைசெய்யும் வழிகாட்டியாகும்.

சூரசம்ஹாரம் கந்தஷட்டி விரத மகிமையை எடுத்துக் கூறும் உள் அர்த்தம் நிறைந்த சம்பவமாகும். ஈழம் தமிழகம் போன்ற நாடுகளில் கந்தஷட்டி விரத காலத்திலே முருகப்பெருமானின் கருணையை வெளிப்படுத்தும் கந்த புராணப்படலம் வாசிப்பதுண்டு. புலம்பெயர்ந்த நாடுகளிலும் பெரும்பாலான இந்துத் தமிழர்கள் கந்தஷட்டி விரதத்தை கடைபிடித்து வருகின்றனர். ஆலயங்களிலே சூரன்போர் வெகுவிமரிசையாக நடைபெறும்.

கந்தபுராணத்திலே உள்ள யுத்தகாண்டதில் இடம்பெறும் சூரபத்மன் வதை படலத்தை விளக்கி அவற்றின் உள்ளார்ந்த தத்துவங்களை அனைவரும் அறியும் வகையில் இந்து ஆலயங்கள் பணிபுரிய வேண்டும். புராணக்கதைகளையும் அவற்றின் தத்துவங்களையும் அறியும் போது இந்து மரபுகள் தொடர்ந்து பின்பற்ற ப்பட்டு இந்துசமயம் மேலும் தழைத்தோங்க உதவும்.

ஆலயங்கள் சமயப்பணி செய்வதோடு தமிழ் வளர்ச்சிக்கும் உதவவேண்டும். தமிழின் கூறுகளான முத்தமிழ் வளர்ச்சியில் ஈடுபாடு கொள்ள வேண்டும். புலம்பெயர்ந்த நாடுகளிலே ஆலயங்கள் சமுகப் பணியாற்றத் தவறுமிடத்து எதிர்கால் சந்ததியினர் ஆலயங்களிலிருந்தும் சமய ஈடுபாடுகளிலிருந்தும் வேறுபடும் நிலை ஏற்படமுடியும்.

ஆலயங்களோடு இணைந்த அறச்சபைகளை ஏற்படுத்தித் தமிழும் இந்து மதமும் புலம்பெயர்ந்த நாடுகளில் சிறந்தோங்க வழியமைக்கவெண்டும் அவ்வாறான முயற்சிகள் எதிர்காலச் சந்ததியினரை ஆலய வழிபாட்டில் ஈடுபாடு கொள்ளச் செய்வதோடு இந்துமதம் சிறந்தோங்க வழி செய்யும்.

நன்றி: தமிழரும் இந்து மரபுகளும்.